Registered as a Newspaper　　பக்கங்கள் 6　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 05　திருவள்ளுவர் ஆண்டு 2025　மாசி 10　(22.02.94)　செவ்வாய்க்கிழமை　ஓசை 04

## மேலதிக சிகிச்சை பெறவேண்டிய நோயாளரை அனுப்புவதுஸ்தம்பிதம்

யாழ்: குடாநாட்டிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு அனுப்பப்படும் நோயாளர்கள் விடயத்தில் தன்னால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உள்ளது என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கவலையுடன் கூறினார், கடந்த வருடம் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் நோயாளர்களை அனுப்பி வைத்த பின்னர் இன்றுவரை எவரையும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்க முடியவில்லை எனவும் இதற்கு கப்பற் போக்குவரத்து வசதியின்மையே காரணம் எனவும் அவர் தெரிவித்தார், முன்னர் மாதாந்தம் 75க்கும் 100க்கும் இடைப்பட்ட நோயாளர் மேலதிக (6ஆம் பக்கம் பார்க்க)

நான்கு படைப்பிரிவு

## தளபதிகள் வழிகாட்டலில் வடபகுதியில் யுத்தம்?

சிறிலங்கா இராணுவத்தின் இருபத்தியிரண்டாவது படைத் தளபதியும், பாதுகாப்பு படையின் கட்டளை அதிகாரியுமான பிரிகேடியர் அசோகா ஜெவர்தன ஏழாவது படையணித் தளபதி பிரிகேடியர் வசந்த பெரேரா, ஒன்பதாவது படையணித்தளபதி பிரிகேடியர் அன்ரன் வியஜெந்திர, பத்தாவது படை அணி தளபதி பிரிகேடியர் சாந்த கொட்டேகொட என்பவர்கள் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் யுத்தத்தை நடாத்திச் செல்வதில் முன்னணியில் திகழ்கின்றார்கள் மீண்டும் வடக்கில் இருபத்தைந்தாவது படையணியை புதிதாக அமைத்து, அதற்கு பிரிகேடியர் சரத் பொன்சேகாவை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஐந்து இராணுவ நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கில் ஆரம்பம்

### உயர் பாதுகாப்பு வட்டாரம் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவம் வடக்கு-கிழக்கில் புதிய ஐந்து இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவ உயர்மட்ட தகவல்கள் தெரிவிப்பதாக 'திவயின' ஞாயிறு பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஒன்று, யாழ்ப்பாணம் பலாலி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், மற்றைய ஒன்று திருகோணமலையில் விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை எதிர்நோக்கிய வண்ணமும், திருகோணமலை வடக்குப் பகுதியிலும் மேற்கொள்ளப்படுகிறது.

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப்பகுதியிலும் ஓர் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பலாலிப் பகுதியில் கட்டளைப் பிரிவு பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன, ஒன்பதாவது படையணி பிரிகேடியர் அன்ரன் விஜேந்திர, இவர்களின் தலைமையில் புலிகளின் வசமிருந்த பல மைல் தூரத்தைக் கைப்பற்றியதாகவும், அச் செய்தியில் குறிப் (6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி வரும் கப்பலில் இராணுவத்திற்கு விறகு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி இராணுவமுகாம்களுக்குத்தேவையான விறகு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படுகிறது. இம்முகாம்களில் நிலவிவரும் விறகுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாகவே கொழும்பில் இருந்து விறகு எடுத்து வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு இராணுவத்தினருக்கு விறகு எடுத்து வருவதற்கு கொழும்பில் இருந்துவடபகுதிக்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களை இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற் (6ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டிற்கு எக்கேடு விளைந்தாலும் யுத்தத்திலிருந்து பின்வாங்கேன்!

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

[கொழும்பு]

"இந்த நாட்டிற்கு என்னதான் கேடு விளைந்தாலும் இலங்கையை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்கும் யுத்தத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை". இவ்வாறு சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மொனறாகலையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் யுத்தத்திற்கான ஆயத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. நாட்டின் ஒற்றுமைக்கு எதிரான சக்திகளை முழுமையாக முறியடித்தபின்னரே அடுத்த நடவ முடிவும் மேற்கொள்ளப் படும் எனவும்,

இந்த நாட்டின் 78 சதவீதமான பெரும்பான்மை இனத்தினரின் உணர்வுகளை, 22 சதவீதமான சிறுபான்மையினரின் தேவைகளை சீனம் செய்யமுடியாது. முழு நாட்டினதும் ஆட்சியும், அதிகாரமும் பெரும்பான்மை இனத்தின் கைகளிலே இருக்க வேண்டும், சிறுபான்மையினருக்கு பாதுகாப்பை பெரும்பான்மையினர் வழங்கு டின் எந்தப்பகுதியிலும் சிறுபான்மையினரிடம் பெரும்பான்மையினரின் பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. இதனை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது என டி.பி. விஜேதுங்கா

## கோமாரியில் 403 தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கப்பல் மூலம் 403 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

மேற்படி பொதிகள் தொடர்பான மேலதிக விபரங்கள் எவையும் தெரியவரவில்லை. தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் இராணுவத்திற்கான பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் இக் கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறை துறைமுகத்தி (6ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருள்களுக்கு கப்பலில் முன்னுரிமை வழங்குக

### அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு வரும் கப்பல்களில் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு முன்னுரிமை வழங்கும்படி அரசாங்க அதிபர் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமே அரசாங்க அதிபர் இவ்விசேட வேண்டு [illegible]

[illegible] பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்தும் குடாநாட்டிற்கான போதிய உணவுப்பொருள்களின் கையிருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவுமே அரசாங்க அதிபர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

அத்தியாவசிய பொருள்களுக்கு

## கப்பல் கட்டணத்தை

# யுத்தத்திலிருந்து ...

...கப்பல் கொண்டிருக்கும் இக் கப்பல் நாளை மறு தினம் பருத்தித்துறை துறைமுகத்தி
(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

[கொழும்பு]

"இந்த நாட்டிற்கு என்னதான் கேடு விளைந்தாலும் இலங்கையை ஒற்றையாட்சியின் கீழ் வைத்திருக்கும் யுத்தத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை". இவ்வாறு சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மொனறாகலையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் யுத்தத்திற்கான ஆயத்தங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. நாட்டின் ஒற்றுமைக்கு எதிரான சக்திகளை முழுமையாக முறியடித்தபின்னரே அடுத்த நடவடிக்கை தொடர்பாக எந்த முடிவும் மேற்கொள்ளப் படும் எனவும்,

இந்த நாட்டின் 78 சதவீதமான பெரும்பான்மை இனத்தினரின் உணர்வுகளை, 22 சதவீதமான சிறுபான்மையினரின் தேவைகளை மையமாகக் கொண்டு உதாசீனம் செய்யமுடியாது. முழு நாட்டினதும் ஆட்சியும், அதிகாரமும் பெரும்பான்மை இனத்தின் கைகளிலே இருக்க வேண்டும், சிறுபான்மையினருக்கு பாதுகாப்பை பெரும்பான்மையினர் வழங்குவார்கள். ஆனால் நாட்டின் எந்தப்பகுதியிலும் சிறுபான்மையினரிடம் பெரும்பான்மையினரின் பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. இதனை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது என டி. பி. விஜேதுங்கா மேலும் கூறினார்.

எனவே இந்த நிலைவராது முற்றாக நாம் பாதுகாக்க வேண்டும். இதுவே இன்று பெரும்பான்மை மக்களுக்கு நாம் செய்யவேண்டியசேவையும் என்றார்.

## பொருளாதாரத் தடையை நீக்க பிரதமர் ரணில் புதிய நிபந்தனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பாதையை திறந்துவிடத்தயார் என்றால் அரசு வடமாகாணம் மீது பிரயோகித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கிக்கொள்ளத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். புலிகள் பொதுமக்கள் செல்லக்கூடிய வகையில் ஆனையிறவுப் பாதையை திறந்துவிட மறுத்தால் பொருளாதாரத்தடை என்பது புலிகள் தங்களால் விதிக்கப்பட்டதான ஒன்றாகவே இருக்கும் எனவும் அவர் கூறினார்.

ஆனையிறவு தரைமார்க்கத்தை தாம் திறந்துவிட்டால் அதன் மூலம் இராணுவம் குடாநாட்டினுள் பிரவேசித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிடும் என புலிகள் கருதுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்திற்குள் இராணுவம் நுழையவேண்டுமானால் எமக்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன.

புலிகளுடன் பேச அரசு தயார் என அறிவித்த பின்னரும் அதன் தலைவர் பிரபாகரனிடமிருந்து எந்தவித பதிலும் இல்லை. பேச்சுக்கு முன்னால் எது குறித்து பேசப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக காவலனாகவே கடமை புரிகிறேன்

### கிழக்கு ராணுவ தளபதி கூறுகிறார்

எமது இராணுவத்தினர் இரத்தம் சிந்திப் பழக்கப் பட்டவர்கள் இல்லை. இதில் ஏற்கனவே ஈடுபட்டவர்களும் இல்லை. நாம் யுத்தத்தில் இரத்தம் சிந்த நேரிட்ட போதே இதில் நடவடிக்கை எடுக்க நேரிட்டது இருப்பினும்கொக்கட்டிச்சோலை போன்ற சம்பவங்களை நான் மறக்க விரும்பவில்லை.

இவ்வாறு கிழக்குமாகாண இராணுவத்தளபதி லக்கி அல்கம தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தாவது; இராணுவத்தில் உள்ளசிறந்தபிரிவினரே இங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஜனநாயகத்தின் காவலன் என்ற ரீதியில் எனது கடமையை ஜனநாயக ரீதியில் ஆற்றவே வந்துள்ளோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார் மாவட்ட ஆயர் அடுத்தமாதம் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்ட கத்தோலிக்க ஆயர் அதி. வண. ராயப்பு ஜோசப் அடுத்த மாத முதல்வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ள இருக்கின்றார்.

இவருடன் கிழக்குமாகாண மதகுருமார்கள் இருவரும் இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாவின் சில்லறை விலை சங்கங்களே தீர்மானிக்கும்

### புனர்வாழ்வுப் பகுதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான மாவின் சில்லறை விலையைத் தீர்மானிக்கும் பொறுப்பை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமே விட்டுவிட்டதாக செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் இருந்து வந்த மாவின் மொத்தவிலையுடன் கப்பல் கட்டணமும் சேர்த்து தற்போது கிலோ ஒன்று 16ரூபா 75 சதமாக செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் மாவின் புதியசில்லறை விலையும் அதிகரிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி மா

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் பாணின் விலை அதிகரிப்பு

(குருநகர்)

இன்று முதல் பாணின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் கட்டணத்தையும் பொருள்களைக்கொள்வனவு செய்வோரே செலுத்தவேண்டுமென்ற சிறிலங்கா அரசின் மிகப் பிந்திய தமிழ் மக்கள் மீதான அழுத்தத்தால் 1கிலோ மாவின் விலை 4 ரூபாவால் அதிகரிக்கப்படுவது தெரிந்ததே.

அதனை அடுத்தே யாழ்-மாவட்ட பேக்கரியாளர் சங்கம் 350 கிராம் கொண்ட பாணின் விலையை 9 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

(21)

## அத்தியாவசிய பொருள்களுக்கு கப்பலில் முன்னுரிமை வழங்குக

### அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு வரும் கப்பல்களில் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு முன்னுரிமை வழங்கும்படி அரசாங்க அதிபர் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமே அரசாங்க அதிபர் இவ்விசேட வேண்டுகோளை விடுத்துள்ளார்,

அண்மைக்காலங்களில் யாழ் குடாநாட்டுக்கு வந்தடைந்த பல கப்பல்களில் உணவுப்பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் கணிசமான அளவில் எடுத்துவரப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்தும் குடாநாட்டிற்கான போதிய உணவுப்பொருள்களின் கையிருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவுமே அரசாங்க அதிபர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## முற்பணம் செலுத்துவதற்கு அரச அதிபரால் முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்துவரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு முற்பணம் செலுத்த முடியாதுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறு அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்கான முற்பணத்தை திறைசேரியே செலுத்த வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருள்களுக்கு கப்பல் கட்டணத்தை அரசே செலுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கான கட்டணத்தை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்பிவைக்கும்அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் கப்பல்களுக்கான கட்டணத்தைச் செலுத்துவதில்லை. இதற்கான கட்டணம் குடாநாட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் மேற்படி அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையை அதிகரிப்பதன் மூலமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான கப்பற்கட்டணத்தை அத்தியாவசியப் பொருள்களை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யும் பொதுமக்களே வழங்க வேண்டியுள்ளது.

இவ்வாறானநிலைமையைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மேற்படி கப்பற்கட்டணத்தை செலுத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனிற்கு அகதிகளாகசெல்வோர் சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பு

### மருத்துவவசதிகள் கூடஇல்லை

(லண்டன்)

பிரிட்டனுக்கு புகலிடம் தேடிவந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை கடந்த ஆறு மாதங்களில் இரு மடங்காக அதிகரித்துள்ளதுஎன அகதிகள் நலன்காப்பு அமைப்பான புகலிடம் கோருவோர் உரிமை பிரசாரம் தெரிவித்துள்ளது.

சிறைகளுக்குப் பதில் விசேட தடுப்புக்காவல் நிலையங்களில் தங்கும் வசதி வழங்கப்படும் என பிரிட்டன் வழங்கிய உறுதி நடைமுறைப்படுத்தவில்லை என இவ்வமைப்பின் ஆய்வு காட்டுகிறது. சில அகதிகளுக்கு மருத்துவ சிகிச்சை உட்பட அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டு வருவதாகவும் இது கூறுகிறது. அண்மையில் பிரிட்டனுக்கு தஞ்சம் கோரிவந்த 175அகதிகளிடம் எடுத்தபேட்டிகள் மூலம்இவ்விபரங்கள்வெளியாகியுள்ளன.

கடந்த ஆறு மாதங்களில் அகதிகளாக வந்தவர்களின் எண்ணிக்கை 317இல்இருந்து 622ஆக உயர்ந்துள்ளது. இதில் சுமார் 400 அகதிகள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். அகதிகளை தங்கவைக்க நிலையம் ஒன்றை நவம்பரில் அரசு அமைத்த போதிலும் சிறையில் அடைக்கப்படுவோர் தொகை அதிகரித்துள்ளது. அகதிகளில்பலர் மூன்றுமாதங்களுக்கு மேல் சிறையில் உள்ளதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மருத்துவசிகிச்சை தேவைப்பட்ட 15 அகதிகளுக்கு சிகிச்சை இதுவரை வழங்கப்படவில்லை. இத்தகவல்கள் குறித்து கருத்து தெரிவிக்க பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு மறுத்துவிட்டது.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருள்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வனம் இல. 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### பாலர் ஆசிரியர் ஆகலாம்

கடைசித் தகைமை. பொ. த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர், தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7578)


### சூரிய காந்தி செய்கை

முல்லை மாவட்டத்தின் தட்டாமலைப்பகுதியில் சூரிய காந்தி மற்றும் நிலக்கடலைப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. சுமார் 59,000 ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இப்பயிர்ச் செய்கை மூலம் பெறப்படும் விதைகள் எதிர்வரும் காலங்களில் இந்த உற்பத்தியை, விரிவாக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### நல்லின ஆடுகள் விநியோகிக்கப்பட்டன

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினரால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் எட்டுக் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இந்த உதவி மூலம் தென்மராட்சி அரசர் கேணிப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னரும் 24 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக ஆடுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

# ஐ. தே. கவிற்கும் சு. கவிற்கும் கொள்கையில் வேறுபாடு இல்லை

## - வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் கடைப்பிடிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும், திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கூறிவரும் சமநிலைப் பொருளாதாரமுறைமைக்கும்இடையே எந்தவித வித்தியாசமும் இல்லை. இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நவ சமசமாஜக் கட்சித் தலைவருமான வாசுதேவ நாணயக்காரா கூறியுள்ளார்.

தென்மாகாணசபைக்கான தேர்தல் பிரசார கூட்டமொன்றில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; உலக வங்கி நிபுணர்கள் குழு அண்மையில் கொழும்புக்கு வந்தபோது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடத்தை சந்தித்தது. அப்போது தமது கட்சி ஆட்சிக்கு வருமானால் திறந்த பொருளாதாரக் கொள்கை எவ்வகையிலும் மாற்றப்படமாட்டாது என அவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஐ. தே: கவை தோற்கடிப்பதற்காக எமது கட்சி ஏன் மக்கள் முன்னணியுடன் சேரவில்லை எனக் கேட்கப்படுகின்றது. அரசாங்கத்தினதும், மக்கள் முன்னணியினதும் கொள்கைகளில் வித்தியாசம் இல்லாதபோது நாம் ஏன் மக்கள் முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட வேண்டும். நாம் ஒருபோதும் மக்களை ஏமாற்றுவதில்லை. அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு தகுந்த கொள்கைகளோ வேலைத் திட்டங்களோ மக்கள் முன்னணியிடம் இல்லை. அவ்வாறு இருந்திருப்பின் கடந்த பதினாறு ஆண்டுகளாக ஐ. தே. க. அரசாங்கம் நீடித்து இருக்க முடியாது. மக்கள் முன்னணியையும் ஐ. ஐ. தே. முன்னணியையும் சேர்ந்த பலர் இன்று ஐ. தே. கவில் இணைந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இல. பாடநூல் விநியோகம் இன்று முதல் ஆரம்பம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் விநியோகம் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு கோட்டங்களும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட திகதிகளில் யாழ் கல்வித் திணைக்களத்திடம் இருந்து இலவசப் பாடப் புத்தகங்களை இன்று தொடக்கம் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பெற்றுக்கொண்ட கோட்டங்கள் தனது பகுதிப் பாடசாலைகளுக்கு இலவசப் பாட நூல்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (பா)

## 'புதுவாழ்வு' நாடகம் பரிசைப் பெற்றது

யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் நடாத்திய விவிலியக் கருத்தைக் கொண்ட நாடக நாட்டுக் கூத்து போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாடகப் போட்டியில் மிருசுவில் செண். நீக்கிலஸ் பங்கு மேடையேற்றிய "புதுவாழ்வு" சமூக நாடகமும் நாட்டுக் கூத்துப் போட்டியில் பாசையூர் கலைக்கழகம் மேடையேற்றிய 'இளைகள்' நாட்டுக் கூத்தும் தலா 2 ஆயிரம் ரூபா பரிசைப் பெற்றுள்ளன. (21)

# கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் இடம் மாற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கை பல்கலைக் கழகம் மிக விரைவில் இடம் மாற இருப்பதாக தெரிய வருகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகளை தற்போது உயர் கல்வி அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது வந்தாறு மூலையில் அமைந்துள்ள மேற்படி பல்கலைக்கழகம் தமிழ் கிராமங்களின் மத்தியில் இருப்பதால் அங்கு முஸ்லிம் சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பில்லை என்பதைக் காரணமாகக் கொண்டு இப்பல்கலைக்கழகத்தை சிறிலங்கா அரசாங்கம் மாற்ற முயற்சி செய்துள்ளது.

இதற்கான நிலம் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆலோசனை செய்து வருவதாகவும் நிந்தாவூர், அல்லது அட்டாளைச் சேனையில் இதற்கான நிலத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக முடிவுவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது

எனவே எதிர் காலத்தில் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை பெரும் அளவில் குறைக்கப்படலாம் என்றும் முஸ்லிம் சிங்கள மக்களின் பல்கலைக்கழகமாக மாற்றகூடிய சாத்தியக்கூறுகளே இருப்பதாக அச்சம் நிலவுகின்றது.

## தெஹியத்த பகுதியில் நகை, பணம் கொள்ளை

(கண்டி)

தெஹியத்த கண்டிபொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்

கொள்ளையைச் செய்துள்ளது.

இக்கொள்ளை நடைபெற்ற

## அநாதைக் குழந்தைகள் இந்துமாமன்றம் நிதியுதவி

### குற்றப்பணம்

(மல்லாகம்)

சுன்னாகம் மாவட்ட நீதிமன்றினால் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், 30 லீற்றர் மண்ணெண்ணெய் களவாடியமைக்காக நவாலியைச் சேர்ந்த நாற்வருக்கு தலா 900 ரூபா குற்றப்பணமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. (09)

## புலவர்மணியின் நினைவு முத்திரை வெளியீடு

(குருநகர்)

மறைந்த தென்தமிழீழ தமிழ் அறிஞரான புலவர் மணி ஏ பெரியதம்பிப்பிள்ளையின்உருவப்படம் பொறித்த தபால் தலையை சிறிலங்கா அரசு வெளியிட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

மே மாதம் 22 ஆம் திகதி தேசிய வீரர்கள் தினத்தன்று வெளியிடப்பட இருக்கும் நான்கு புதிய தபால் தலைகளில் ஒன்றாக இது இருக்கும்.

ஏனைய மூன்று தபால் தலைகளும் தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள அரசியல், இலக்கிய வாதிகளினது என்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

## மானிப்பாயில் 215குடிசைகள் புனரமைப்புவேலைஆரம்பம்

(குருநகர்)

மானிப்பாயில் அமைந்துள்ள அந்தோனியார் அகதி முகாம்கள் மூன்றிலும் அடங்கியுள்ள 215 குடிசைகளையும் புனரமைக்கும் வேலையை யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் மேற் கொண்டு வருகிறது.

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலகம் இதற்கான செலவினத்தை குடிசைகளைப் புனரமைத்து முடித்ததன் பின் பாக வழங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 215 குடும்பங்களுக்கும் மனித முன்னேற்ற நடுநிலையம் மாதாந்தம் 300 ரூபா பெறுமதி வாய்ந்தஉலர் உணவுப் பொருள்களையும் வழங்கி வருகிறது. (21)

## சுழிபுரம் பகுதியில் மலேரியா பரவும் ஆபத்து

(தொல்புரம்)

சுழிபுரம், தொல்புரம் பகுதிகளில் மலேரியா நோய் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக தெரியவருகிறது.

சுழிபுரம் நடாத்தனை, தொல்புரம் மேற்கு கிழக்குக் கிராமங்களைச் சேர்ந்த சில மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டு தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இந்நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் சுழிபுரம் சுகாதாரப்பரிசோதகர்பிரிவினால்துரிதமாக மேற்கொள்ளப்படுகிறது கிராமங்கள் தோறும் இந்நோய் தடுப்புப்பற்றிய சுகாதாரக் கருத்தரங்குகள் மக்கள் மத்தியில் மருத்துவத் தொண்டர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. (41)

## சிறுவர் நூலகத் திறப்பு விழா

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய சிறுவர் நூலக திறப்பு விழாவும் ஆத்மீகக் கருத்தரங்கும் நாளை புதன் கிழமை இடம் பெறும். பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா சிறுவர் நூலகத்தை திறந்து வைப்பார். சுவாமி விவேகானந்தரின் கல்வி சிந்தனைகள் எனும் கருத்தரங்கும் இடம் பெறும்.

## பிராமணக்குளம் உடைப்பு தடுக்கப்பட்டது

முல்லை மாவட்டம் ஒட்டிசுட்டான் வட்டத்தில் அமைந்துள்ள பிராமணக்குளம் அணைக்கட்டு உடைப்பெடுத்து அவ் உடைப்பின் ஊடாக நீர் வெளியேறிக்கொண்டிருந்தது.

இவ்வாறு வெளியேறும் நீரைத் தடுக்கும் பணியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சம்மணக்குளம் கிராமிய உற்பத்திக் குழுவினர் மேற்கொண்டனர்.

அப்பகுதி மக்களையும் இக் குளத்தின் கீழ் உள்ள சாணிப் பங்காளிகளையும் இணைத்துதொடர்ந்துமூன்று நாட்களாக மண் சாக்குகள் போட்டு மேற்கொண்டமுயற்சியின் பயனாக வெளியேறும் நீர் தடுக்கப்பட்டது. இதனால் 150 ஏக்கர் நெற் செய்கை அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

### கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுசங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுசபை மண்டபத்தில் நடைபெறும்.

### தடகள போட்டி

யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தின் இல்ல தடகள போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும்.

### உதவி நிதி

யாழ். பல்கலைக்கழகசித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் நிதியம் 1991 - 92 கல்வியாண்டு மாணவர்களுக்கு

## ஹெலி தாக்குதல்

(அரியாலை)

நேற்று காலை 8.50 மணியளவில் பலாலியிலிருந்து வந்த உலங்குவானூர்தி ஒன்று அரியாலை கிழக்கு கடலில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சலிபர் தாக்குதலை மேற்கொண்டது. சுமார் ஐந்து நிமிடம்வரை விட்டு விட்டு மேற்கொண்ட தாக்குதலை அடுத்து மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டு கரைசேர்ந்தனர். சேதவிபரம் தெரியவில்லை (90)

## நினைவு கூருகின்றோம்.

## 1994. 02. 22

1986ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்த்தீவில்

பகுதியினரால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் எட்டுக் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இந்த உதவி மூலம் தென்மராட்சி அரசர் கேணிப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னரும் 24 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக ஆடுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது

# இடம் மாற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கை பல்கலைக் கழகம் மிக விரைவில் இடம் மாற இருப்பதாக தெரிய வருகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகளை தற்போது உயர் கல்வி அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது வந்தாறு மூலையில் அமைந்துள்ள மேற்படி பல்கலைக்கழகம் தமிழ் கிராமங்களின் மத்தியில் இருப்பதால் அங்கு முஸ்லிம் சிங்கள மாணவர்களுக்கு பாதுகாப்பில்லை என்பதைக் காரணமாகக் கொண்டு இப்பல்கலைக்கழகத்தை சிறிலங்கா அரசாங்கம் மாற்ற முயற்சி செய்துள்ளது.

இதற்கான நிலம் கொள்வனவு செய்வது தொடர்பாக ஆலோசனை செய்து வருவதாகவும் நிந்தாவூர், அல்லது அட்டாளைச் சேனையில் இதற்கான நிலத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக முடிவுவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது

எனவே எதிர் காலத்தில் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை பெரும் அளவில் குறைக்கப்படலாம் என்றும் முஸ்லிம் சிங்களமக்களின் பல்கலைக்கழகமாக மாற்றகூடிய சாத்தியக்கூறுகளே இருப்பதாக அச்சம் நிலவுகின்றது.

# தெஹியத்த பகுதியில் நகை, பணம் கொள்ளை

(கண்டி)

தெஹியத்த கண்டிபொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று 44 ஆயிரத்து 850ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 32ஆயிரத்து 930ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளை அடித்துச் சென்றது.

தெஹிஅத்த - ஹேரானிகல உபதபால் அலுவலகத்துடன் இணைந்துள்ள வீடொன்றுக்குள் தபால் நிலையஜன்னல் வழியாக கொள்ளைக் கோஷ்டி நுழைந்து மேற்படி கொள்ளையைச் செய்துள்ளது.

இக்கொள்ளைநடைபெற்ற அதே இரவு பாடசாலை விஞ்ஞான கூடம் உடைக்கப்பட்டு பெறுமதியான உபகரணங்களும் திருடப்பட்டுள்ளன; இதன் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை. இது போன்ற பல கொள்ளைச் சம்பவங்கள் இப்பகுதியில் நடைபெற்றதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது, இச் சம்பவங்கள் குறித்து பொலிஸ் விசாரணைகள் நடைபெறுகின்றன.

# மணற்காட்டு பகுதியில் 12 லட்சம் சவுக்கு கன்று

வடமராட்சிக் கிழக்கிலுள்ள மணற்காட்டுப் பிரதேசத்தில் 12 இலட்சம் சவுக்கு மரங்கள் நடுகை செய்யும் பாரிய திட்டமொன்று 'சூழல் பாதுகாப்பு நிறுவனத்தினால்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகரும் மணல் மலைகளாகக் காணப்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்தில் காற்றினால் அள்ளுண்டு செல்லும் மணல்கள் அருகிலுள்ள விளை நிலங்களைப் பாதிப்படையச் செய்யாமல் இருப்பதற்காக பல ஆண்டுகளுக்கு முன் நடுகை செய்யப்பட்ட சுமார் 400 ஏக்கர் சவுக்கம் காடுகளில் தற்போது 'தெரிந்து களைதல்' நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினரால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 1000 ஏக்கரில் 12 இலட்சம் சவுக்கம் கன்றுகள் நடுகை செய்வதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடற்புலிகளினது சிறப்புத் தளபதியினதும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளரதும் ஆலோசனைக்கிணங்க சூழல் பாதுகாப்புப் பகுதியினரால் 'சூழல்பாதுகாப்பு நிறுவனம்', என தனியான ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு அந்நிறுவனத்தின் மூலம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# பொதுத்தேர்தலுக்கு ஐ. தே. க. ஏற்பாடு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான முன்னோடி ஆயத்த வேலைகளை மே 31 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்து விடுமாறு ஆளும் ஐ. தே. க நாடு முழுவதிலும் உள்ள அதன் கிளைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

தொகுதிதோறும்வீடுவீடாகச் சென்று அங்கத்தவர்களை சேர்த்தல், முக்கியஸ்தர்களை அழைத்து கூட்டங்களில் பேசவைத்தல், திறமைசாலிகளை தெரிவுசெய்து அமைப்பு வேலைகளில் ஈடுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கட்சி அமைப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

# அநாதைக் குழந்தைகள் இந்துமாமன்றம் நிதியுதவி

யாழ். பிரதேசசபைச் செயலாளர் தமது பகுதியிலுள்ள 28 கிராமசேவை அலுவலர்கள் பகுதிகளிலும் தாய் தகப்பன் இழந்த குழந்தைகள் விபரங்களைக் கிராமசேவை அலுவலர்கள் உடனடியாகச் சேகரிக்கும்படி பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்நிதி உதவி பிரித்தானிய இந்துமாமன்றத்தினால் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தாய், தகப்பனை இழந்த குழந்தைகளை வைத்துப் பராமரிப்போர் உடனடியாகத் தத்தமது பகுதிக் கிராம அலுவலர்களிடம் நேரில் சென்று பெயர், விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். பிரதேசசபைச் செயலாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார்.

இது பற்றிய பூரண விபரத்தை அந்த அந்தப் பகுதி இந்து ஆலயங்கள் மூலம் கிராமசேவை அலுவலர் ஊடாகஅனுப்பிவைக்குமாறு அவர் கூறியுள்ளார். (24)

# 'உதவும் கரங்கள்' பொருள் உதவி

(வடமராட்சி)

வடமராட்சியில் இன்பருட்டி ''உதவும் கரங்கள்'' வர்த்தக நிலையம் இன்று ஏற்பட்டுள்ள போர்க்கால சூழலில் எவ்வித கட்டுப்பாடுமின்றி குறித்த விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருவது மக்களுக்கு பெரும் ஆறுதலை உண்டுபண்ணி வருகிறது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுடன் ஒப்பிடும் போது இந்நிலையம் குறைந்த விலையிலேயே உணவுப் பொருள்களை விற்பனை செய்து வருகிறது எனினும் இவ்வர்த்தக நிலையத்தால் உணவுப்பொருள்கள் கூடுதல் மூலதனம் செய்யப்படாததால் மக்கள் தொடர்ந்தும் நியாய விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் கஷ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர். (யோ)

# தாதிமார் வேலை நிறுத்தம் செய்ய முயற்சி

அரச வைத்தியசாலைகளில் கடமை புரியும் தாதிகளின் சேவையை மாகாண சேவையில் இருந்து மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதிக்கு முன்னர் கொண்டுவர வேண்டும் அல்லாவிடின் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதிமார் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்பர் என அரசசேவை ஐக்கிய தாதிகள் சங்கத் தலைவர் வண. மொரத்தட்டுவ ஆனந்ததேரோ தெரிவித்துள்ளார்

அரசியலமைப்பு 13ஆம் திருத்த சட்டத்தில் தாதிமாரின் சேவையை மாகாண சபையிடம் கையளிக்க வேண்டும் என குறிப்பிடவில்லை. இது தொடர்பாக நாம் பல வருடங்களாக கண்டனம் தெரிவித்து வந்தோம் எமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிட்டவில்லை. ஆகையால் ஏப்ரல் 2ஆம் திகதிக்கு முன் நியாயமான முடிவு கிடைக்காவிட்டால் வேலை நிறுத்தத்தில் குதிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும்அவர் கூறினார்

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுசங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுசபை மண்டபத்தில் நடைபெறும்.

## தட கள போட்டி

யாழ். புனிதமரியாள் வித்தியாலயத்தின் இல்ல தடகள போட்டிகள் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும்.

## உதவி நிதி

யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் நிதியம் 1991 - 92 கல்வியாண்டு மாணவர்களுக்கு அவர்களது வெட்டுப் புள்ளி ஒழுங்கில் முதல் மூவருக்கும் இப்பரிசில்களை வழங்கியுள்ளது

மேலும் வருடாந்தம் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது (05)

## வீரத்துறவி வில்லிசை

திருநெல்வேலி இராமகிருஸ்ணாலய மாணவிகள் ''வீரத்துறவி'' என்ற வில்லிசை நிகழ்ச்சியை பாடசாலை தோறும் நடாத்தி வருகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் அந்த வில்லிசை நிகழ்ச்சி கடந்த கிழமை கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரிகளில் நடைபெற்றது.

## சிறிலங்காவும் வெற்றி பெற்றது

இந்தியாவிற்கு எதிரான ஐந்துநாள் போட்டிகளிலும் ஒருநாள் போட்டிகளிலும் படுதோல்விகண்ட சிறிலங்கா கிரிக்கட் அணி நேற்று முன்தினம், இத்தொடரின் இறுதி ஒருநாள் டெஸ்ற் போட்டியில் நான்கு விக்கெற்றுகளால் இந்தியாவைத் தோற்கடித்தது.

ஜலந்தரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 213 ஓட்டங்களைப் பெற்றது மழை காரணமாக ஆட்டம் தடைப்பட்டதால் 34 ஓவர்களில் 140 ஓட்டங்களை எடுக்கும்படி சிறிலங்காவிற்கு பணிக்கப்பட்டது. சிறிலங்கா அணி 33ஆம் ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 141 ஓட்டத்தை பெற்றது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக சிறிலங்கா அணியின் அரவிந்த டி சில்வா தெரிவானார்.

...து.

இவ்வாறு வெளியேறும் நீரைத் தடுக்கும் பணியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சம்மணக் குளம் கிராமிய உற்பத்திக் குழுவினர் மேற்கொண்டனர்.

அப்பகுதி மக்களையும் இக் குளத்தின் கீழ் உள்ள காணிப்பங்காளிகளையும் இணைத்துதொடர்ந்துமூன்று நாட்களாக மண் சாக்குகள் போட்டு மேற்கொண்டமுயற்சியின் பயனாக வெளியேறும் நீர் தடுக்கப்பட்டது. இத...

(அரியாலை)

நேற்று காலை 8.50 மணியளவில் பலாலியிலிருந்து வந்த உலங்குவானூர்தி ஒன்று அரியாலை கிழக்கு கடலில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சுலிபர் தாக்குதலை மேற்கொண்டது. சுமார் ஐந்து நிமிடம்வரை விட்டு விட்டு மேற்கொண்ட தாக்குதலை அடுத்து மீனவர்கள் தமது தொழிலைக் கைவிட்டு கரைசேர்ந்தனர். சேதவிபரம் தெரியவில்லை (90)

# நினைவு கூருகின்றோம்..

# 1994. 02. 22

1986-ம் ஆண்டு இத்தினத்தில் மன்னார்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.சிறீநாத்** (விறாஸ்பிள்ளை அன்ரன்பேனாட் தயாநிதி-பரப்பாங் கண்டல்-மன்னார்)

**வினோத்** (மாசிலாமணி குலாஸ் மைக்கல் குலாஸ் -வங்காலை-மன்னார்)

மலையகம் - தலவாக்கொல்லையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சென். கூம்ஸ் தோட்டத்தொழிலாளியான தமிழ்ப்பொதுமகன்.

யாழ். கோட்டை முன்பாக சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன்.

1988-ம் ஆண்டு பூநகரி, 4-ம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தம்பி** (.........)

1989-ம் ஆண்டு யாழ்-கோண்டாவில் ரயில் நிலையப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையிலீடுபட்ட தேசவிரோதக்குழுவினரால் அடித்துக் கொல்லப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்

யாழ்-நெல்லியடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மருத்துவமனைக்காவலாளியான தமிழ்ப்பொதுமகன்.

1991-ம் ஆண்டு யாழ்-கட்டுவன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**தர்சன்** (ஆண்டி ஜீவா - பெரியகடை - திருமலை)

இதேபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை வேவு பார்க்கச் செல்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**சங்கரி** (மதுராங்கி விமலநாதன் - திருக்கடலூர் திருமலை)

**லவநிதா** (ரதிமலர் கார்த்திகேசு-கரம்பன்-ஊர்காவற் துறை-யாழ்)

கிளி - ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப்பிரிந்த

**சுதாங்கனி** (சுதா தில்லையம்பலம்-இராமநாதபுரம் கிளிநொச்சி)

1993-ம் ஆண்டு பூநகரி - பள்ளிக்குடாப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.கங்காதரன்-கங்கா** (கன்னையா முத்துக்குமார் - பாரதிபுரம்-மட்டு)

மட்டு-அம்பிலாந்துறைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழிளைஞன்-

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8683)

நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# நிர்வாக தலைவர் பதவியை சந்திரிகாவிற்கு கொடுக்க வேண்டும்

## சுதந்திர கட்சியில் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் போது சுதந்திரக் கட்சியின் நிர்வாக தலைமைப் பதவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடமிருந்து திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு மாற்றப்படவேண்டும் எனக் கோரிக்கை எழுந்ததைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேற்றுமைகள் நிலவுவதாக 'ராவய' இதழின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமாவோ தற்போது தலைமைப் பதவி வகித்த போதும், அவர் இரண்டாம்தர தலைமைப் பதவிக்கு சென்றால் முக்கிய தலைவர் பதவிக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்க வரலாம்என்ற நிலை கட்சியின் சகல மட்டத்திலும் நிலவுவதாக கருதப்படுகின்றது.

திருமதி சிறிமாவோவிற்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக இருக்கின்ற போதும், அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான சுதந்திரக்கட்சி வேட்பாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவே வரவேண்டும் எனப் பலரும் கருதுகின்றனராம்.

எதிர்க் கட்சிகளின் சார்பில் பிரதான தலைவராக தற்போது தென்மாகாண சபைத் தேர்தலில் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவே செயற்பட்டு வருகின்றார். இந்த தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சி தோல்வி அடைந்து எதிர்க்கட்சி ஆட்சி அமைக்குமாயின் சுதந்திரக் கட்சியில் சந்திரிக்கா குமாரணதுங்காவின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது.

இந்திய அகதிமுகாமில் பிறந்த

# தமிழ்ப் பிள்ளைகளின் பிறப்பை பதிவதில் சிக்கல்

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் பிறந்த இலங்கைப் பிள்ளைகளின் பிறப்பு இலங்கை சட்டத்தின்கீழ்பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமான சுற்றுநிருபம் பதிவாளர் நாயகத்தினால் மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளது

இந்தியாவில் அகதிமுகாமில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பைபதிவு செய்ய விண்ணப்பப் படிவத்துடன் பெற்றோரின் திருமணச் சான்றிதழ், பெற்றோர் திருமணம் செய்தவர்களாயின் பிள்ளை பிறந்த போது அவரின் தந்தை இலங்கைப் பிரஜை என்பதை நிருபிக்கும் சாட்சி இலங்கை திரும்பியதை நிருபிக்கும் சான்றிதழ், பெற்றோர் பிறப்புச் சான்றிதழ் என்பவை பிரதேச செயலாளரினால் சிபார்சு செய்யப்பட்டு பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். பதிவாளர் நாயகம் தமது சிபார்சுடன் அவற்றை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக இந்தியாவில் இலங்கைத் தூதுவர் அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பார். இலங்கைத் தூதுவர் அலுவலகத்திலேயே பிறப்பு பதியப்படும்.

# மக்களைக் கொல்வதற்கு விமானப்படை திட்டமிடுவதில்லை

## - புதிய தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் மீது திட்டமிட்டு விமானப்படையினர் தாக்குதல் நடத்துவதில்லை. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களின் அடிப்படையிலேயே குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என்று புதிய விமானப் படைத்தளபதியான ஏயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

புனித யாகப்பர் தேவாலயம் மீதான குண்டு வீச்சுத் தாக்குதல் குறிதவறி குண்டு வீழ்ந்ததால் ஏற்பட்ட சம்பவம். இத்தவறை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தவறுகளை ஏற்றுக் கொண்ட புதிய விமானப் படைத் தளபதி இனிமேல் தவறு செய்யாமல் தனது படையை வழி நடத்துவாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என அப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் விளக்க மறியலில் வைப்பு

(கொழும்பு)

பொலிஸ் சேவையிலிருந்து தற்காலிக வேலை நீக்கத்திற்கு ஆளாகியிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் வீட்டிலிருந்து 77 தோட்டாக்களை போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் வெள்ளிக்கிழமை கைப்பற்றினர்.

பிரஸ்தாப சப்-இன்ஸ்பெக்டர் தான் வேலை செய்த இடத்திலிருந்து ரிவோல்வர் ஒன்று காணாமல் போனதையிட்டு தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்.

போதைப் பொருள் பாவிப்பவரான இவர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# வயோதிபர் ஒருவர் ராணுவத்தால் சுட்டுகொலை

## பூவரசங்குளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா எட்டாம் கட்டைபூவரசங்குளத்தில்சிறிலங்கா இராணுவத்தினர் வயோதிபர் ஒருவரை சுட்டுக் கொன்றதுடன் 10பேரைக் கைது செய்தனர். இவர்களில் மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏழுபேரை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் பூவரசங்குளம் எட்டாங் கட்டையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பால் கொள்வனவு விற்பனவு நிலையம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பால் உற்பத்தியாளர்களினதும் பால் நுகர்வோரினதும் நன்மை கருதி வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் புலோலியில் ''பால் கொள்வனவு விற்பனவு நிலையம்'' ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. கால்நடை வளர்ப்போர் கூட்டு

## இறுதிப்போட்டிகள் வெள்ளியன்று நடக்கும்

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் ஆதரவுடன் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் ஒழுங்கு செய்த சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பிரசங்க நூற்றாண்டு யாழ். மாவட்ட மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிகளை யாழ். கல்வித் திணைக்களம் பாடசாலை மட்டங்களிலும், கோட்ட மட்டங்களிலும் நடாத்தி முடித்துள்ளது.

கோட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான இறுதியான மாவட்டப் போட்டி எதிர்வரும் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

## விவசாய ஓய்வூதிய விண்ணப்பப் பத்திரம் இல்லை

விவசாயத் திணைக்களத்தில் விவசாயிகள் ஓய்வூதிய விண்ணப்பப் படிவம் தற்சமயம் முடிவடைந்து விட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விண்ணப்பப் படிவங்கள் கொழும்பில் இருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும் அவை இன்னமும் வந்து சேரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இவை இம்மாத முடிவில் திணைக்களம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அதன் பின்னர் விவசாய

பொது மக்களுக்கான

அறிவித்தல்

(1) யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல இறைச்சிக் கடைகளிலும் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு, முத்திரையிடப்பட்ட இறைச்சி விற்பனைக்காக இருத்தல் வேண்டும்.

(2) மிருகங்களை வீடுகளில் வைத்து வெட்டிப் பங்கு போட்டு இறைச்சியைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தலாகாது.

(3) ஏதேனும் கொண்டாட்டத்திற்கு மிருகங்களை வீட்டில் வைத்து வெட்டவேண்டியிருப்பின் உரிய அத்தாட்சியுடன் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராவது எம்முடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) இவற்றை மீறிச் செயல்படுவோர் மீது ''கசாப்புச் சட்டத்திற்கு அமைய'' நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) இது சம்பந்தமான மேலதிக தகவல்களை எனது அலுவலகத்திலோ, யாழ் மாநகரசபை உணவுப் பரிசோதகரிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை, சுகாதார வைத்திய அதிகாரி
யாழ்ப்பாணம்.

(இ-8685)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

14-வது இசைவிழா

11-ம் நாள் 22.2.94

செவ்வாய்க்கிழமை

திருநெல்வேலி, ஜெகன் வர்த்தக நிலைய ஆதரவில்

மாலை.

4.00 - 5.00 மங்கள இசை

கே. ராமதாஸ் )
எஸ். கதிரமலை ) நாதஸ்வரம்
கைதடி கே. பழனிமலை
பி. பஞ்சமூர்த்தி | தவில்
பி. பாலநந்தீஸ்வரன்

5.00 - 5.10 மிருதங்க இசை

ம. தவேந்திரன் ம. தனேந்திரன்
ம. குலேந்திரன் ம. லோகேந்திரன்

5.10 - 5.25 பாட்டு

பி. குமுதினி
கே. சஜினி
ஈ. அமிழ்தினி
பி. சங்கீதா
ஏ. சுந்தரவதனி
பி. மதுரா
எஸ். அன்புச்செல்வி
எம். ஜனனி
கே. பரணவமலர் | பாட்டு
வீ. சாந்தி
கே. ப்ரதீபா

பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து தரும்



முல்லை மாவட்ட கலைஞர்களின்

கைப்பற்றினர்.
பிரஸ்தாப சப்-இன்ஸ்பெக்

விளக்க மறியலில் வைக்கப்
பட்டுள்ளார்.

கட்டைபூவரசங்குளத்தில்சிறி
லங்கா இராணுவத்தினர்


பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து தரும்



முல்லை
மாவட்ட
கலைஞர்களின்

முத்துக்கள்
இரண்டு

பாயும்புலி பண்டாரவன்னியன்
(வரலாற்று நாடகம்)

ஆக்கிரமிப்பாளரின் அவலம்
(இசை நாடகம்)

இடம்: அரியாலை காசிப்பிள்ளை அரங்கு
காலம்: 22-02-94 மாலை 7-00 மணி
அன்பளிப்பு: 1000/- 500/- 15/- 10/-

விடுதலைப் புலிகள் கலை
பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும்

விளம்பர அன்பளிப்பு:
புங்குடுதீவு — நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (சி-8686)


கைது செய்தனர். இவர்களில் மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்; ஏழுபேரை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் பூவரசங்குளம் எட்டாங் கட்டையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பால் கொள்வனவு விற்பனவு நிலையம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பால் உற்பத்தியாளர்களினதும் பால் நுகர்வோரினதும் நன்மை கருதி வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் புலோலியில் ''பால் கொள்வனவு விற்பனவு நிலையம்'' ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. வ. தணிகாசலம் தலைமையில் இப்பால் கொள்வனவு விற்பனவு நிலயத் திறப்பு விழா நடைபெற்றது.

வரும் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

## விவசாய ஒய்வூதிய விண்ணப்பப் பத்திரம் இல்லை

விவசாயத் திணைக்களத்தில் விவசாயிகள் ஒய்வூதிய விண்ணப்பப் படிவம் தற்சமயம் முடிவடைந்து விட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விண்ணப்பப் படிவங்கள் கொழும்பில் இருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும் அவை இன்னமும் வந்து சேரவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இவை இம்மாத முடிவில் திணைக்களம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அதன் பின்னர் விவசாய ஒய்வூதயவிண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (பா)

# கொழும்பில் கைதான சிற்பக் கலைஞர்மீது வழக்கு

(கொழும்பு)

கொழும்பு மயூராபதி சிறீ பத்திரகாளி அம்மன் கோவிலில் வைத்து கடந்த ஜூன் மாதத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிற்பக் கலைஞர்களில் ஆறு பேரை விடுதலை செய்யும்படி சட்டமா அதிபர் சிபார்சு செய்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த சித்திரத்தேர் சிற்பிகளான கே. செல்வராசா, ஆர். சிவகுமாரன், ஆர். பிரதீபன், வீ. தியாகலிங்கம் எஸ். கருணாகரன், பி. பாஸ்கரன், வி. சத்தியலிங்கம் ஆர். கோபிநாத் ஆகிய எட்டுப் பேரும் கடந்த ஜூன் மாதத்தில் கோவிலில் வைத்து சி. ஐ டி. பொலிசாரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து திருமதி புவனேஸ்வரி செல்வராசா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்தபோது இவர்களில் ஆறுபேரை விடுவிக்கும்படி சட்டமா அதிபர் சிபார்சு செய்தார். விடுவிக்கப்படாதிருக்கும் சுப்பிரமணியம் கருணாகரன், விஸ்வலிங்கம் சத்தியலிங்கம் ஆகியோர் மீது ஒரு வாரத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# ஒப்பந்தத்தை மீறுகிறது காப். சபைமீது கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயக் காப்புறுதி உதவிகளை வழங்க கமத்தொழில் காப்புறுதி சபை மறுத்துள்ளது.

பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர்களுக்கான காப்புறுதியை வழங்க மட்டக்களப்பு காப்புறுதி சபை மறுத்துவிட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் காப்புறுதிக்காக மாதாந்தம் செலுத்திய தவணைக் கட்டணத் தொகையை மட்டும் மீளப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், காப்புறுதிக்கான இழப்பீடு எதுவும் வழங்க முடியாது எனவும் மட்டக்களப்பிலுள்ள காப்புறுதிச் சபை அலுவலகம் கைவிரித்து விட்டது.

காப்புறுதியின் பெயரால் தவணைக் கட்டணத்தைப் பெற்றுவிட்டு இழப்பு ஏற்பட்ட வேளை உரிய காப்புறுதி தராது கட்டிய தவணைக்கட்டணத்தைத் தர முற்படுவது ஒப்பந்தத்தையே மீறும் செயலாகும் என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.


4.00 - 5.00 மங்கள இசை

கே. ராமதாஸ் )
எஸ். கதிரமலை ) நாதஸ்வரம்
கைதடி கே. பழனிமலை
பி. பஞ்சமூர்த்தி | தவில்
பி. பாலநந்தீஸ்வரன்

5.00 - 5.10 மிருதங்க இசை

ம. தவேந்திரன் ம. தனேந்திரன்
ம. குலேந்திரன் ம. லோகேந்திரன்

5.10 - 5.25 பாட்டு

பி. குமுதினி
கே. சஜினி
ஈ. அமிழ்தினி
பி சங்கீதா
ஏ. சுந்தரவதனி
பி. மதுரா
எஸ். அன்புச்செல்வி
எம். ஜனனி
கே. பரணவமலர் | பாட்டு
வீ. சாந்தி
கே. ப்ரதீபா
ரி. ரேணுகா - வயலின்
வி தபோதநாயகம் - மிருதங்கம்

5.30 - 5.45 வீணை இசை

எஸ். பவதாரிணி
ஜே. அமுதா
எஸ். கானப்ரியா | வீணை
ஏ. கர்ஷினி
ந. அபிராமி, எஸ். சுகந்தி
பி. ரதிரூபன் - மிருதங்கம்

5.45 - 6.15 பாட்டு

கே. நீதிமதி - பாட்டு
ஆர்.எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. ஆதவன் - மிருதங்கம்

6.15 - 7.00 பாட்டு

மேரிசறோஜா ஜஸ்டின் - பாட்டு
பாக்யலட்சுமி நடராஜா - வயலின்
எஸ். துரைராஜா - மிருதங்கம்

7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்

திரு. சி. ஜெகசீலன் (ஜெகன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி)
திரு. பி. செந்தில் (குமரன் ரெக்ஸைரயில்ஸ்)
திரு. தனபாலசிங்கம் (அம்பாள் வர்த்தக நிலையம்)
திரு. வ. மகேஸ்வரன், (நியூ சுபமாலா)
அருளுரை: சிவஸ்ரீ ப. மனோகர குருக்கள் (பிரதமகுரு சிவன் கோயில், வல்வெட்டித்துறை)
தலைவர்: எஸ். நவரத்தினராஜா (மின்சார பொறியியலாளர்)
பிரதம விருந்தினர்: எம். ராமதாஸன் (மராமத்துப் பொறியியலாளர்)
சிறப்பு விருந்தினர்: பி. தவராஜா (மராமத்துப் பொறியியலாளர்)

7.30 - 8.30 இசைக்கச்சேரி

பொன். ஸ்ரீ வாமதேவன் - பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்

8.30 - 9.30 பரதநாட்டியம்

'சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகள்'
தயாரிப்பு: புனிதகுமாரி ஏரம்பமூர்த்தி
விமலகுமாரி ஸ்ரீ ரவிகுலன்

வாழ்த்துவோர்:
சைமன் வர்த்தக நிலையம்
பலாலி றோட், திருநெல்வேலி.
(சி-8684)

# கச்சதீவுஒப்பந்தத்தைஉடன் அமுல்படுத்த வேண்டும்

**- வாழப்பாடி கோரிக்கை**

(சென்னை)

கச்சதீவு ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படுத்துவதே தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண ஒரேவழியாகும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; கச்சதீவு ஒப்பந்தத்தின் படி, இந்திய தமிழக மீனவர்கள் கச்சதீவில் மீன்பிடி வலைகளை உலர்த்தவும், இந்திய இலங்கை கடற்படையின் மேற்பார்வையில் இப்பகுதியில் மீன்பிடிக்கவும் உரித்துடையவர்கள் ஆவர் இந்திய மீனவர்கள் இப்பகுதியில் அடிக்கடி தாக்குதலுக்கு இலக்காகுவதால் இந்திய இலங்கை கடற்படையினர் இணைந்து அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் யோசனை தெரிவித்தார்:

அத்துடன் இலங்கைக்கு பெற்றோல், டீசல் மற்றும் மருந்துப் பொருட்கள் கடத்தப்படுவதாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாக தமிழ்நாடு அரசு மெத்தனப் போக்கையே கடைப்பிடிப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதே வேளை இந்திய மீனவர்களைப் பாதுகாக்கமத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இலங்கை கச்சதீவு ஒப்பந்தத்தை மீறுகிறது எனவும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சென்னையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது:

# நேட்டோவின் விமானத்தாக்குதல் வேண்டுகோள் விடத்தேவையில்லை

**ஐ. நா. சிறப்பு பிரதிநிதி**

(சரஜேவோ)

பொஸ்னியா சேர்புகளுக்கு எதிராக நேட்டோ நாடுகள் விமானத் தாக்குதல் நடத்துமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமே இல்லை என தமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிப்பதாக பொஸ்னியாவிலுள்ள ஐ நா. வின் சிறப்பு பிரதிநிதி யாசுசூ அக்காசி தெரிவித்துள்ளார்.

நேட்டோ தாபனம் விதித்த காலக்கெடு முடிவடைந்த பின்னர் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஐ நா. பாதுகாப்பு சபை பொஸ்னியா நிலை பற்றி விசேடமாக இரகசிய கூட்டமொன்றை நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார்:

இதேவேளை நேட்டோவின் வேண்டுகோளை ஏற்று சரஜேவோவிலிருந்து இராணுவசாதனங்களை அகற்றும் வேலையில் பொஸ்னியா சேர்புகள் அநேகமாக முழுமையான அளவில் நிறைவேற்றி விட்டதாக கூறப்படுகின்றது.

## ஐ. நா. பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை பெற முயற்சி

ஐ. நா. பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை இன்னுமொரு தடவை முயற்சி மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பத்து வருடங்களுக்குள் இரு தடவைகளில் இலங்கை பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறும் வாய்ப்பை ஏனைய நாடுகளுக்காக விட்டுக் கொடுத்துள்ளது. இந்தியாவுக்காக ஒரு தடவையும் பங்களாதேசுக்காக ஒரு தடவையும் இலங்கை இவ்வாறு விட்டுக் கொடுத்துள்ளது. ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை இல்லாத நாடுகள் இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை மாற்றம் பெறுவது தெரிந்ததே.

### ஸ்பெயின் செல்ல விசா மறுப்பு

(மட்றிட்)

ரஷ்யாவின் தீவிர தேசியவாதி விளாடிமிர் ஸிரினோவ்ஸ்கி ஸ்பெயின் செல்ல விசா மறுக்கப்பட்டுள்ளது. தம்மை ஸ்பெயின் மன்னர் கார்லொஸ் அங்கு வருமாறு அழைத்திருந்ததாக ஸிரினோவ்ஸ்கி தெரிவித்தார் இதை ஸ்பெயின் வெளிநாட்டமைச்சு மறுத்துள்ளது.

### கபில்தேவிற்கு பாராட்டு

கிரிக்கெட் விளையாட்டில் தனிச்சிறப்பான பல சாதனைகளை நிகழ்த்தி உலகம் அனைத்திலும் இருந்து பல பாராட்டுதல்களைப் பெற்

கலைத்துவமான முறையில் உங்களை
படம்பிடிக்க உகந்த இடம்

சிறி
படப்பிடிப்பு கலையகம்

அர்ச்சுனா வீதி,

### நினைவாலய திறப்பு

(யாழ்ப்பாணம்)

வீரச்சாவடைந்த திவகத்தைச் சேர்ந்த முதல் பெண் போராளி வீரவேங்கை லவனிதா அவர்களின் 'நினைவாலய திறப்பு விழா' இன்று நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெறும். இவ்விழாவின்போது இக்குடியிருப்பு விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய திவகக் கோட்ட ரீதியான தாச்சிப் போட்டி, யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட, கரபந்தாட்டப் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (22)

## குழு அமைப்பு

வடமராட்சிப் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்தும் முகமாக கல்வி அபிவிருத்திக்குழு ஒன்று ஹாட்லிக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் அதன் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்; தலைவர் திரு. கே. நடராசா (ஹாட்லி அதிபர்). செயலாளர் திரு. ந. அனந்தராஜ் (உடுப்பிட்டி அதிபர்) உட்பட 18பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவாகினர். இந் நிர்வாகத்திற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா போஷகராகவும், பருத்தித்துறை கரவெட்டி பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உபபோஷகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (யோ)

# அரசியல் சமூகவிடுதலைக்கு அடித்தளமிடுவது கல்வியே

**-இளம்பரிதி**

(தொல்புரம்)

அரசியல் விடுதலைக்கும், சமூக விடுதலைக்கும் அடித்தளம் இடுவது கல்வியே. எனவே கல்வியில் எமது மண்ணிலுள்ள ஒவ்வொருவரும் அதிக அக்கறை காட்டி நாட்டின் கல்வி அறிவை விருத்தி செய்ய உதவ வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார். சண்டிலிப்பாய் மேஜர் முரளி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், எமது மாணவர்களை அறிவியலாளர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும்ஆக்கிமேம்பட்டகல்வியின் தரத்தை உயர்த்துவதே மாணவர் அமைப்பின் நோக்கமாகும். எமது பிரதேசங்களில் கல்வியறிவு அற்ற நிலையில் எந்த ஒரு பிரஜையும் இருக்கக் கூடாது என்பதற்காகவே இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அனைவரும் கல்வியில் பயனடைய முன் வரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி தமது உரையில் எதிர்கால சந்ததியினர் நிம்மதியாக வாழ வேண்டும் என்றால் இந்த மண்ணில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் பெரும் பங்கும் பொறுப்பும் உண்டு எனத் தெரிவித்தார்.

இங்கு உரைநிகழ்த்திய சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தமது உரையின் போது எமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர் சமுதாயம் உற்சாகமும் உறுதியும் உள்ளவர்களாக கல்வி நிலையில் மேம்பட அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களின் பிள்ளைகளும், சமத்துவமான கல்வியை அடைய இத்தகைய கல்வி வளர்ச்சிக்கழகங்களில்ஆற்றப் படும் இலவச சேவையை பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (41)

## சீனப் புலமைப் பரிசில் விண்ணப்பம் கோரப்பட்டது

(கொழும்பு)

மக்கள் சீனக் குடியரசினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு புலமைப்பரிசில்களுக்கு தகுதி வாய்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. பொறியியல், மருத்துவம், விவசாயமும், விஞ்ஞானமும், பொருளாதார முகாமைத்துவம், கலை போன்ற துறைகளில் பட்டப்படிப்புக்கு தெரிந்து எடுக்கப்படுவதற்கான மாணவர்கள் க. பொ. த. (உ/த) வில் ஒரே அமர்வில் இரண்டு திறமைச் சித்திகளுடன் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பெப்ரவரி 28-ம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கோர் நற்செய்தி!
கண்டவுடன் சொக்கிப் போகும்
காட்சிமிகு மாடமாக புதிதாக அமைகின்றான்



W
« வீடியோ எக்கனோமி »
நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு மாசி 11-ம் திகதி
(23-02-1994) புதன்கிழமை மாலை 6 05 தொடக்கம் 7.15வரை
மங்களகரமான திறப்புவிழா
நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.
உங்கள் ஆவல்களைப் பூர்த்தி செய்யும்



- புதிய, பழைய வீடியோ திரைப்படப் பிரதிகளையும்
- எமது தமிழீழ கலைஞர்களால் தயாரித்து வெளியிடப்படும்

பின்னர் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஐ நா. பாதுகாப்பு சபை பொஸ்னியா நிலை பற்றி விசேடமாக இரகசிய கூட்டமொன்றை நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நேட்டோ

கிறது.

கடந்த பத்து வருடங்களுக்குள் இரு தடவைகளில் இலங்கை பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெறும் வாய்ப்பை ஏனைய நாடுகளுக்காக விட்டுக் கொடுத்துள்ளது. இந்தியாவுக்காக ஒரு தடவையும் பங்களாதேசுக்காக ஒரு தட

பெறுவது தெரிந்ததே.

## ஸ்பெயின் செல்ல விசா மறுப்பு

(மட்றிட்)

ரஷ்யாவின் தீவிர தேசியவாதி விளாடிமிர் ஸிரினோவ்ஸ்கி ஸ்பெயின் செல்ல விசா மறுக்கப்பட்டுள்ளது. தம்மை ஸ்பெயின் மன்னர் கார்லொஸ் அங்கு வருமாறு அழைத்திருந்ததாக ஸிரினோவ்ஸ்கி தெரிவித்தார் இதை ஸ்பெயின் வெளிநாட்டமைச்சு மறுத்துள்ளது.

## கபில்தேவிற்கு பாராட்டு

கிரிக்கெட் விளையாட்டில் தனிச்சிறப்பான பல சாதனைகளை நிகழ்த்தி உலகம் அனைத்திலும் இருந்து பல பாராட்டுதல்களைப் பெற்றுள்ள கபில் தேவை பாராட்டும்வைபவம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது. இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சிறப்பு நினைவுப் பரிசையும், பாராட்டு சான்றிதழையும் இவ்வைபவத்தின்போது கபில் தேவுக்கு வழங்கியுள்ளார்.

## ஜப்பானுக்கு மிரட்டல்

(வாஷிங்டன்)

ஜப்பான் தனது கம்பியில்லா தொலைபேசி சந்தையை தனக்காகத் திறக்காவிட்டால் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான தடைகளை விதிக்கப் போவதாய் அமெரிக்கா மிரட்டியுள்ளது. அமெரிக்க - ஜப்பான் பொருளாதார உச்சிமாநாடு தோல்வியடைந்ததையடுத்து இந்த மிரட்டல் வந்துள்ளது.

## உதவிப் பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான 1993மார்கழி மாதக் கொடுப்பனவு 16-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் விடத்தற்பளை உப-தபாலகத்தில் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது. (22)

## இடமாற்றம்

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் விரிவாக்க அலுவலர் திரு. ச. கணபதிப்பிள்ளை யாழ். மாவட்ட கடற்றொழில் அலுவலராகவும் யாழ். மாவட்ட கடற்றொழில் அலுவலர் திரு. சி. இராதாகிருஷ்ணன் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலராகவும் பொறுப்பேற்றுள்ளனர். (25)


கலைத்துவமான முறையில் உங்களை படம்பிடிக்க உகந்த இடம்

**சிறி படப்பிடிப்பு கலையகம்**

அர்ச்சுனா வீதி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(இ-8545)

வகை வகையான வண்ண டிசைன்களில்
நகைகள் வாங்குவதற்கு
நாடவேண்டிய இடம்

**சீதா நகை மாளிகை**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8530)

அசல் 22 கரட் பவுணில்
நம்பிக்கை நாணயமுடன் நவீன டிசைன்களில்
நகைகள் செய்து கொடுக்கப்படும்.

**தமிழரசு நகைத் தொழிலகம்**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(இ-8532)

சுவையும் சுத்தமும் நிறைந்த
உணவுப் பதார்த்தங்களுக்கு
நாடுங்கள்

**றொலெக்ஸ் ஹோட்டல்**

340,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8572)

W

**வீடியோ எக்கனோமி**

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு மாசி 11-ம் திகதி
(23-02-1994) புதன்கிழமை மாலை 6 05 தொடக்கம் 7.15வரை

**மங்களகரமான திறப்புவிழா**

நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

உங்கள் ஆவல்களைப் பூர்த்தி செய்யும்

- புதிய, பழைய வீடியோ திரைப்படப் பிரதிகளையும்
- எமது தமிழீழ கலைஞர்களால் தயாரித்து வெளியிடப்படும் ஒளிவீச்சு வீடியோ நாடாக்களையும்

மற்றும்,

- அன்பளிப்புப் பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- அழகுசாதனப் பொருட்கள் போன்றவற்றை நிதான விலையில்

நீங்கள் பெற்றுக்கொள்ள

**வீடியோ எக்கனோமி**

இன்னும் நீங்கள் அதிசயிக்கத்தக்க வகையில் பலவருட அனுபவமிக்க

**நியூவே றெக்கோடிங்**

V. சந்திரன் அவர்களால்

நீங்கள் விரும்பும் பாடல்களை புதிய முறையில் ஒலிப்பதிவு செய்து
எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள

W

(சென்றல் நர்ஸிங் ஹோம் அருகாமையில்)

**வீடியோ எக்கனோமி**

**THE VIDEO ECONOMY**

இல. 303 A, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
உரிமையாளர்: ஆறுமுகம் ரமேஷ்

(இ-8687)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

தான் கூவுவதைக் கேட்கவே, கதிரவன் உதயமாகிறான் என்று எண்ணும் சேவல் போன்றவன் அவன்.
ஜார்ஜ் ஈலியட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## பசியைவிட முதன்மையாய் போன யுத்தம்

சீனாவில் இருந்து பெறப்பட்ட 700 தொன் எடையுள்ள 500 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டு வருவதாக வெளிவரும் தகவல்கள் வடக்கில் மிக விரைவில் பெரும் யுத்தம் ஒன்றிற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது. அத்தோடு டி. பி. விஜேதுங்கா கடந்த வருடம் ஆயுதக் கொள்வனவிற்கென ஒதுக்கிய நிதியில் மேலும் பல ரக ஆயுத தளபாடங்கள் மிகவிரைவில் வந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிலங்காவின் ஜனாதிபதி எப்பொழுதுமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றிச் சிந்திப்பதில்லை என்பதையே இது காட்டுகின்றது. எவ்விலை கொடுத்தும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதென்பதே அவரது முடிவாகும். ''யுத்தத்திற்குப் பயன்படாத கத்தி பலாக்காயை வெட்டவா?'' என்ற சிங்களப் பழமொழியை மேற்கோள் காட்டும் டி. பி. விஜேதுங்காவின் கேள்வியானது, அவர் எப்பொழுதும் கத்தியைத் தமிழரை வெட்டுவதற்குப் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றாரே ஒழிய சிங்களவரின் பிரதான உணவில் ஒன்றாகக் கருதப்படும் பலாக்காயை வெட்டப்பயன்படுத்த அவர்தயாராகஇல்லைஎன்பதையே காட்டுகின்றது, அதாவது, உணவைவிட அவருக்கு யுத்தமும், தமிழரின் இரத்தமுமே சுவையாக இருப்பவையாகத் தெரிகின்றது.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த நல்லெண்ணத்தூதுக்குழுக்கள் சில தமக்கு சிறிலங்கா ஜனாதிபதியின் நல்லாசிகள் இருப்பதாகத் தெரிவித்துக் கொண்டன. சில பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமக்கு உதவத்தயாராக இருப்பதாக தணிந்த குரலில் கூறிக்கொண்டன. ஆனால், இச்சமாதான முயற்சிகள் பற்றி அவர்கள் வடக்கே வரும் போது பேசுவது போன்று தெற்கில் பேசுவதில்லை. பேசினாலும் எவராலும் பொருட்படுத்தப்படுவதும் இல்லை.

# வடமராட்சி இராச கிராமத்தில்

# விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாசறை

நேற்றுவரை உறங்கிக் கிடந்த கிராமம் ஒன்று இன்று எழுச்சியடைய ஆரம்பித்து விட்டது. இக்கிராமத்தின் உறக்க நிலைக்கு ஊக்கமூட்டிய காரணிகள் அனைத்தும் களைந்தெறியப்பட்டு வருகிறது. வடமராட்சியில் அமைந்திருக்கும் ராஜகிராமத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கிராமிய எழுச்சிப் பாசறை இக்கிராமத்தின் எழுச்சிக்கு வித்திட்டுள்ளது.

கரவெட்டிப் பகுதியிலே நான்கு கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ள அந்தக் கிராமத்தில் வாசம் செய்யும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் பின்னணி பெரும் வியப்பை அளிக்கும் அதேவேளை திடுக்கிடும் பல தகவல்களையும் இன்று காற்றிலே கலக்கவிட்டவண்ணமுள்ளது. தாழ்வான நிலப்பரப்பில் 287குடும்பங்களைச் சேர்ந்த 964பேர் வசித்து வரும் இந்தக் கிராமத்தின் வரலாறு பெரும் சோக நிகழ்வுகளை வெளிக்காட்டி நிற்கிறது.

1979ஆம் ஆண்டு முன்னாள் சிறிலங்கா அரசாங்கத்தின் கிராமிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதுதான் இந்த 'இராஜ' கிராமம். அக்காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரான இராஜலிங்கம் என்பவரது முயற்சியால் உருவாக்கப்பட்டமையினால் அது 'இராஜ' கிராமம் என அவர் பெயரால் அழைக்கப்பட்டது.

1974, 76ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த பௌத்த பிக்குகள் இம்மக்களைத் தமது பக்கம் ஈர்த்து மதம் மாற்றினர். இதனால் இம்மண்ணில் 'தமிழ்பௌத்த சங்கம்' உருவாகியது. இதன் தொடராக அங்கிருந்த தமிழ் பாடசாலை சிங்களப் பாடசாலையானதுடன் இருபது பரப்புகளில் அரசமரம் நாட்டப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. அரசமரம் மக்களால் பூஜிக்கப்பட்டதுடன் இவர்களுக்கான சிங்கள மொழிப் போதனைகளும் நடாத்தப்பட்டன. இதைக்

மக்களாக இணைந்துகொண்டு அவர்களது வாழ்க்கை நிலைகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொண்டதுடன் மலரப் போகும் தமிழீழத்தில் ஏனைய பிரதேசமக்களைப் போல் இவர்களும் அனைத்து வளங்களும்பெற்று சிறப்புற வாழ வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

அங்கு ஊடுருவி இவர்கள் பிரிவு ரீதியாகத் தயாரித்த அறிக்கைகளிலிருந்து பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் பெரும்பாலானவர்களுக்குச் சொந்தக் காணிகளோ வீடோ கிடையாது. இங்குள்ள ஒவ்வொரு வீடுகளிலும் ஐந்து முதல் ஏழு வரையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக இணைந்து கூட்டு வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர். இதனால் இங்கு அடிப்படை சுகாதார வசதிகளே கிடையாது. மலசல கூடங்கள் இருந்தும் ஒரு சில குடும்பங்களே இவற்றைப் பயன்படுத்தி வருகின்றன. பெரும்பாலான வீடுகளில் மலகூடங்கள் விறகுகள் சேமிக்கும் இடமாக இருந்து வருகிறது. இவர்கள் பொதுவான இடங்களையே இதற்குப் பயன்படுத்தி வருவதை அவதானிக்க முடிந்தது.

மூன்று பாடசாலைகள், மூன்று சிறுவர் பாடசாலைகள், நூல் நிலையங்கள், நான்கு சனசமூக நிலையங்கள், நான்குகுளங்கள், வங்கி, கூட்டுறவுச் சங்கம், மாதிரிக் கடைகள் போன்ற அனைத்து வளங்களையும் கொண்டு காணப்படும் இந்த கரவெட்டிப் பகுதியில் இம்மக்கள் ஏன் இவ்வாறான ஒருவாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர் என்பதே அங்கு செல்லும் அனைவரதும் கேள்வியாக இருக்கும்.

இவ்வளவு பாடசாலைகளும் பெருமளவு சிறந்த ஆசிரியர்கள் இருந்தும் இவர்கள் ஏன் எழுத்தறிவு இன்றியிருக்

பாடுகளே இவர்களுடைய பொருளாதார வீழ்ச்சிக்கும், சுகாதார மற்றும் போசாக்கின்மை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் அடிப்படைக்காரணமாக அமைந்திருப்பதை இலகுவில் இனம் காணக்கூடியதாக இருந்தது. இது போன்ற இவர்களது பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணிகளைத் திரட்டிக் கொண்ட விடுதலைப் புலிகள் வேகமாகத் தமது செயற்பாட்டில் குதித்தனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அங்கே தமது கண்காட்சி ஒன்றை நிறுவியுள்ளது- அங்கு இவர்களது உற்பத்திகள், தயாரிப்புகள், கட்டட நிர்மாணம் போன்ற பல்வேறுபட்டவையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன-இவைஎமது சொந்த வளங்களைக் கொண்டு இங்கேயே தயாரிக்கப்படுவதை மக்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவச் சேவையினரின் பொதுச் சுகாதாரப் பணியினர் வீடுவீடாகச் சென்று மக்களின் சுகாதார சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்ததுடன்அவற்றிற்கானஆலோசனைகளையும் வழங்கிய வண்ணமுள்ளனர். பாடசாலைகளுக்கு சிறுவர்களையும் பெரியவர்களையும் அழைத்து அவர்களை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்திவரு

**சசீகரன்**

வதுடன் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சைகளையும் அளித்து வருகின்றனர் இவர்கள் தமது வைத்திய பரிசோதனையின் போது பெரும்பான்மையான மாணவர்களுக்கு பற்சூத்தை நோய் இருப்பதைக் கண்டு பிடித்ததுடன்உடனடியாகவே உரிய சிகிச்சையையும் வழங்கினர்- அத்துடன் மாணவர்களுக்கும் கிராமிய தொண்டர்களுக்கும் சுகாதார கல்விபற்றிய பயிற்சிகளையும் வழங்கி வருவதுடன்கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றனர்- வீட்டு மலசலகூடங்களுக்கு கிருமிநாசினி தெளிப்பதிலும்

கள் புனர்வாழ்வுப் பிரிவினர் தமது உற்பத்தி மற்றும் வெளியீடுகள் அடங்கிய கண்காட்சி ஒன்றையும் நடாத்தி வருகின்றனர்- இவர்கள் தாம் அங்கு திரட்டிய கருத்துக்களிலிருந்து குழந்தைகள்,கர்ப்பிணித்தாய்மார்களது போஷாக்குகள்மற்றும் கல்வி மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றுக்கு தீர்வு காண்பதன் மூலம் இம்மக்களின் ஆரோக்கியமான எதிர்கால வாழ்விற்கு வித்திட முடியும் எனத்தெரிவித்தனர்.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் நான்கு வயது வரையான பிள்ளைகளைத் தினமும் காலை 7-30 முதல் மாலை 5-30மணிவரை தாம்பொறுப்பேற்று பராமரிக்க திட்டமிட்டுள்ளனர்-பராமரிக்கும்நேரங்களில் தினமும் சராசரி குழந்தைக்குத் தேவையான போஷாக்கு நிறைந்த உணவுகளை வழங்குவதுடன் அவர்களின் அறிவுசார்ந்த வளர்ச்சிக்கான கல்வியையும்ஊட்டவுள்ளனர். அத்தோடு பாட்டு, அறிவு சார்ந்த விளையாட்டுகளான பொருத்தி விளையாடுதல், அமைப்பு வேலைகள் கீறி விளையாடுதல் போன்றவற்றில் ஊக்கமளிக்க உள்ளனர்- இத்திட்டத்தின் மூலம் ஆரோக்கியமான ஓர் குழந்தையாக இவர்கள் திகழ்வார்கள் என்பதுடன் பெற்றோருக்குஇவர்களால் ஏற்பட்டுள்ள சுமையைக் குறைப்பதும் தான் இவர்களது அடிப்படை நோக்கமாகவுள்ளது- அத்துடன் பாடசாலை செல்லாத சிறுவர்களுக்கு பெற்றோரின்அனுமதியுடன் தேவையான சகல வசதிகளையும் வழங்கி அவர்களை எழுத்தறிவுடையவர்களாக்கவும் உள்ளனர். மிகக் குறைந்த வயதில் பெண்கள் திருமணமாகிக் குழந்தைகளைப் பெருமளவில் பெற்றுக் கொள்வதால் பிறக்கும் குழந்தைகளும் இயற்கையாகவே போஷாக்குக் குறைந்த -நிறைகுறைந்த பிள்ளைகளாகவே பிறக்கின்றனர்- அத்துடன் தாய்மார் கூடப் போஷாக்கு இல்லாத நிலையிலேயே உள்ளனர்- இதனால் இவர்களது திருமண வயதைப் பின்போடச் செய்

ளையிடம் இரண்டு வயதுக் குழந்தையைப் பராமரிக்கப் பணித்துவிட்டு கணவனும் மனைவியும் காலையில் கூலி வேலைக்குச் சென்று மாலையில் வீட்டிற்கு வந்து அதன் பின்னரே சமைத்து உண்கின்றனர்- இதன்போது குழந்தைகளுக்கும் தமது உணவுகளையே வழங்குகின்றனர்- இதுவும் குழந்தைகளின் போஷாக்கின்மைக்கும்ஆரோக்கியமற்ற வளர்ச்சிக்கும் காரணமாகின்றன.

மேலும் பாலர்களுக்கான கல்வி, சிறுவர்களுக்கான கல்வி, முதியோருக்கான கல்வி ஆகியவற்றையும் மகளிர் அணியினர் மேற்கொள்ளவுள்ளனர்- இவர்கள் எழுத்தறிவில்லாத முதியவர்களுக்கென மாதர் சங்கம் ஒன்றை உருவாக்கி அங்கே தினசரி பத்திரிகைகளைத் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அங்குள்ள படித்த ஒரு சில பெண்பிள்ளைகளைக் கொண்டு வாசித்துக் காட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்- இதன்மூலம் முதியோருக்கும் ஓரளவு சமூக நிலைப்பாடுகளை எடுத்து விளக்க முடியும் எனக் கருதுகின்றனர்-

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் இவர்களுக்குள் வீடு, நிலம் இல்லாமையே முக்கிய பிரச்சினையாகவுள்ளது- இத்தகைய பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது- இவர்கள் வீடற்றவர்களுக்கு அக்கிராமத்தில் உள்ள நிலத்தை தேர்ந்தெடுத்து அதில் வீடுகளை அமைத்துக் கொடுத்து இவர்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளனர்-

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பல்வேறுபட்ட பிரிவுகளும் ஒன்றிணைந்து வெவ்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்வைத்து உடனடியாக செயலில் இறங்குகின்றனர்- இதுவரை இருட்டில்

...அவரது முடிவாகும். ''யுத்தத் திற்குப் பயன்படாத கத்தி பலாக்காயை வெட்டவா?'' என்ற சிங்களப் பழமொழியை மேற்கோள் காட்டும் டி. பி. விஜேதுங்காவின் கேள்வியானது, அவர் எப்பொழுதும் கத்தியைத் தமிழரை வெட்டுவதற்குப் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றாரே ஒழிய சிங்களவரின் பிரதான உணவில் ஒன்றாகக் கருதப்படும் பலாக்காயை வெட்டப்பயன்படுத்த அவர்தயாராகஇல்லைஎன்பதையே காட்டுகின்றது, அதாவது, உணவைவிட அவருக்கு யுத்தமும், தமிழரின் இரத்தமுமே சுவையாக இருப்பவையாகத் தெரிகின்றது.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணம் நோக்கி வந்த நல்லெண்ணத்தூதுக்குழுக்கள் சில தமக்கு சிறிலங்கா ஜனாதிபதியின் நல்லாசிகள் இருப்பதாகத் தெரிவித்துக் கொண்டன. சில பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமக்கு உதவத்தயாராக இருப்பதாக துணிந்த குரலில் கூறிக்கொண்டன. ஆனால், இச்சமாதான முயற்சிகள் பற்றி அவர்கள் வடக்கே வரும் போது பேசுவது போன்று தெற்கில் பேசுவதில்லை பேசினாலும் எவராலும் பொருட்படுத்தப்படுவதும் இல்லை.

மாறாக பௌத்த பேரினவாதங்களின் கண்டனக் குரல்களே ஓங்கி ஒலிப்பதுண்டு. சமாதானம் பேசுவதற்கு அவர்களுக்குத் தகுதி போதவில்லை என அவர்கள்விமரிசிப்பதும் உண்டு பௌத்த பேரினவாத அமைப்புக்களின் கூச்சல்தான் இவ்வாறு இருந்தாலும் தவறு இல்லை. நல்லெண்ணக்குழுக்கள் வடக்கே வரும்போது யாரிடம், உரையாடிவிட்டு வந்தார்களோ அவர்களே இவர்கள் திரும்பும் முன்பே இனவாதக் கூச்சல்போடத் தொடங்கி விடுகின்றனர்.

இது அவர்களின் வழமையான பாணியாகும். இதன் மூலம் அவர்கள் இரு காரியங்களைச் சாதிக்க நினைக்கின்றார்கள்; ஒன்று அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரென உலகை நம்பவைப்பது. இதன் மூலம் பொருளாதார உதவியைப்பெற்றுக் கொள்வது. இரண்டாவது இராணுவத்திற்குத் தேவையான ஓய்வை வழங்குவதும், அடுத்த தாக்குதலுக்கான சீரமைப்புச் செய்வதும், திட்டமிடுவதும் ஆகும்.

இந்த வகையிலேயே இம் முறையும் சமாதான முயற்சிகள் என்ற ரீதியில், வடக்கே சில நல்லெண்ணக் குழுக்கள் வர அனுமதித்து தனக்கான கால அவகாசத்தை அரசு பெற்றுக்கொண்டுள்ளது. இதன் மூலம் தொடர்ச்சியான தோல்வியினால் குழம்பிப்போயிருந்த இராணுவக் கட்டமைப்பைச் சீர் செய்வதற்கும், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கும், யுத்தத்திற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்திவருகின்றது. இவை கணிசமான அளவில் தற்போது நிறைவெய்தியுள்ளன.

இந்நிலையில் இன்னும் சிறிது காலத்தில் வட பகுதியில் பெரும் தாக்குதலுக்கு அரசு தயாராகிவிடும். அப்பொழுது அரசின் சமாதான முயற்சிகள் யாவும் விடுதலைப் புலிகளினால் குழப்பப்பட்டுவிட்டதாகப் பிரசாரம் செய்யவும் கூடும். இதற்கு வடபகுதி சென்று வந்த நல்லெண்ணத் தூதுக்குழுக்களின் பெயர்கள் இழுக்கப்படும்; நல்லெண்ணக் குழுக்களும் இரண்டும் கெட்ட நிலை அடையக்கூடும்.

இதனை இனிமேலாவது வடக்கே வர முயற்சிக்கும் நல்லெண்ணத்தூதுக்குழுக்களும் இவர்களின் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண்டவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்; அதாவது சமாதானமென்பது சிறிலங்கா அரசின் அகராதியில் இல்லை என்பதும், அது உலகை ஏமாற்றவும், இராணுவத்திற்கான கால அவகாசம் வழங்குவதற்கான ஒரு ஏமாற்று நடவடிக்கை என்பதுமே புரிந்துகொள்ள வேண்டியனவாகும் இதற்கேற்பவே இவர்கள் முயற்சியும் அமையவேண்டும்.

...டதுதான் இந்த 'இராஜ' கிராமம். அக்காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரான இராஜலிங்கம் என்பவரது முயற்சியால் உருவாக்கப்பட்டமையினால் அது 'இராஜ' கிராமம் என அவர் பெயரால் அழைக்கப்பட்டது.

1974, 76ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த பௌத்த பிக்குகள் இம்மக்களைத் தமது பக்கம் ஈர்த்து மதம் மாற்றினர். இதனால் இம்மண்ணில் 'தமிழ்பௌத்த சங்கம்' உருவாகியது. இதன் தொடராக அங்கிருந்த தமிழ் பாடசாலை சிங்களப் பாடசாலையானதுடன் இருபது பரப்புகளில் அரசமரம் நாட்டப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. அரசமரம் மக்களால் பூஜிக்கப்பட்டதுடன் இவர்களுக்கான சிங்கள மொழிப் போதனைகளும் நடாத்தப்பட்டன. இதைக் கண்ணுற்ற அக்காலத்துத் தமிழ்ப் பற்றாளர்கள் இணைந்து அக்காலப் பகுதியில் நீதியமைச்சராக இருந்த நிஸங்க விஜயரட்ணாவை அழைத்து வந்து நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இப்பாடசாலை மீண்டும் தமிழ்ப் பாடசாலையானது- பெயருக்குமட்டுமே 'இராஜகிராமம்' என அழைக்கபபட்ட இக்கிராமத்தவர் எவரும் அங்கே 'இராஜ' வாழ்க்கையை அனுபவித்ததே கிடையாது.

மாறாக, இவர்கள் குடாநாட்டிலேயே மிகவும் பின் தங்கியவர்களாக -அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் காலத்தைக் கழித்துவருகின்றனர். கல்வி. சுகாதாரம், பழக்க வழக்கங்கள், பொருளாதார நிலைமைகள், மன நிலை ஆகிய அனைத்து நிலைகளிலும் இருந்து மிகவும் பின் தங்கிய நிலையில், அறியாமையும் அவர்கள் வாழ்க்கையில் இணைந்திருந்தது. இக்கிராமத்திற்குள் விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவினர் அண்மையில் பிரவேசித்தனர். கரவெட்டி மேற்கு, கரவெட்டி தெற்கு, கரவெட்டி வடக்கு, மத்தொனி ஆகிய நான்கு சிற்றூர்களை இணைத்ததாக ''கிராமியப் பாசறையும் கண்காட்சியும்'' எனும் வேலைத் திட்டத்தை அமுலாக்கி இம்மக்களின் எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்ற கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான இந்நிகழ்வு 19ஆம் திகதிவரை நீடித்தது. இக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பல்வேறுபட்ட அமைப்புகளும் ஒருங்கிணைந்து தமது வேலைத் திட்டங்களை வீடுவீடாக மேற்கொள்ளத் தொடங்கினர்.

விடுதலைப் புலிகளின் பல பிரிவினர் வீடுவீடாகச்சென்று விபரங்களைத் திரட்டத் தொடங்கினர். மக்களுடன் ...

...இருந்து வருகிறது. இவர்கள் பொதுவான இடங்களையே இதற்குப் பயன்படுத்தி வருவதை அவதானிக்க முடிந்தது.

மூன்று பாடசாலைகள், மூன்று சிறுவர் பாடசாலைகள், நூல் நிலையங்கள், நான்கு சனசமூக நிலையங்கள், நான்குகுளங்கள், வங்கி, கூட்டுறவுச் சங்கம், மாதிரிக் கடைகள் போன்ற அனைத்து வளங்களையும் கொண்டு காணப்படும் இந்த கரவெட்டிப் பகுதியில் இம்மக்கள் ஏன் இவ்வாறான ஒருவாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர் என்பதே அங்கு செல்லும் அனைவரதும் கேள்வியாக இருக்கும்.

இவ்வளவு பாடசாலைகளும் பெருமளவு சிறந்த ஆசிரியர்கள் இருந்தும் இவர்கள் ஏன் எழுத்தறிவு இன்றியிருக்கிறார்கள்? இந்தக் கேள்விக்கு விடை காணப் புறப்பட்ட போது, ''இன்று வீட்டிலே அம்மாவும் அப்பாவும் சண்டை. அதாலை நான் பள்ளிக்கூடம் போகேலை'', ''தம்பி தங்கச்சியைப் பார்க்கவேண்டும் அதாலை தான் போகேல்லை'', ''அம்மாவும் அப்பாவும்வேலைக்குப் போய் விட்டார்கள், அதாலை நான் போகேல்லை'' ''வீட்டை விட்டு விட்டு எல்லோரும் போக ஏலாது- அதாலை பிள்ளைகளை மறிச்சுப் போட்டம்'' என்பன போன்ற பதில்களே பிள்ளைகளிடம் இருந்தும் பெற்றோரிடம் இருந்தும் கிடைத்தன- விடிய வந்ததும் ஒவ்வொரு வீடாகச் சென்று பிள்ளைகளை வலிந்துஇழுத்து வந்து பாடசாலை வகுப்பறைக்குள் இருத்துவதே அந்தப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களினது நாளாந்த முதற்பணியாக இருந்து வருகிறது. அவ்வாறு திரட்டினால் கூட நானூறு பேர் பதிவாகியுள்ள இந்தப் பாடசாலைகளில் நூறுபேரைமட்டுமே ஆசிரியர்களால் அழைத்துச் செல்ல முடிகிறதாம். இதைவிட சாதாரணதரம்வரைகற்கக்கூடிய வயதுகளையுடைய தொளாயிரம் வரையான மாணவர்கள் பாடசாலைப்பக்கமே தலை வைத்துக் கூடப் படுத்ததில்லை என திரட்டப்பட்ட கணிப்பீடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இதைவிட அங்கு வசிக்கும் குடும்பத் தலைவர்களில் தொண்ணூறு வீதத்திற்கும் மேற்பட்டோர் எழுத்தறிவே இல்லாதவர்களாகவுள்ளனர்-

இவை அனைத்திற்குமேலாக அங்குள்ள பெண்பிள்ளைகள் தமது 14 முதல் 16 வயதிற்குட்பட்ட கால எல்லையை தமக்குரியதிருமண காலமாக கையாண்டு வருகின்றனர்- இவர்கள் தமது 25ஆவதுவயதில் 5முதல் 7 பிள்ளைகளுக்குத் தாயாகி விடுகின்றனர்- இவர்களுடைய இத்தகைய திட்டமிடப்படாத செயற்...

...வழங்கிய வண்ணமுள்ளனர். பாடசாலைகளுக்கு சிறுவர்களையும் பெரியவர்களையும் அழைத்து அவர்களை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்திவரு

### சசிகரன்

வதுடன் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சைகளையும் அளித்து வருகின்றனர் இவர்கள் தமது வைத்திய பரிசோதனையின் போது பெரும்பான்மையான மாணவர்களுக்கு பற்சூத்தை நோய் இருப்பதைக் கண்டு பிடித்ததுடன்உடனடியாகவே உரிய சிகிச்சையையும் வழங்கினர்- அத்துடன் மாணவர்களுக்கும் கிராமிய தொண்டர்களுக்கும் சுகாதார கல்வி பற்றிய பயிற்சிகளையும் வழங்கி வருவதுடன் கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றனர்- வீட்டு மலசலகூடங்களுக்கு கிருமிநாசினி தெளிப்பதிலும் கிணறுகளுக்கு குளோறின் போடுவதிலும் ஈடுபட்டனர்-

இதேபோல் விடுதலைப்புலிகள் மகளிர்அமைப்பின் பெண் இத்திட்டத்தின் மூலம் ஆரோக்கியமான ஓர் குழந்தையாக இவர்கள் திகழ்வார்கள் என்பதுடன் பெற்றோருக்குஇவர்களால் ஏற்பட்டுள்ள சுமையைக் குறைப்பதும் தான் இவர்களது அடிப்படை நோக்கமாகவுள்ளது- அத்துடன் பாடசாலை செல்லாத சிறுவர்களுக்கு பெற்றோரின் அனுமதியுடன் தேவையான சகல வசதிகளையும் வழங்கி அவர்களை எழுத்தறிவுடையவர்களாக்கவும் உள்ளனர். மிகக் குறைந்த வயதில் பெண்கள் திருமணமாகிக் குழந்தைகளைப் பெருமளவில் பெற்றுக் கொள்வதால் பிறக்கும் குழந்தைகளும் இயற்கையாகவே போஷாக்குக் குறைந்த -நிறைகுறைந்த பிள்ளைகளாகவே பிறக்கின்றனர்- அத்துடன் தாய்மார் கூடப் போஷாக்கு இல்லாத நிலையிலேயே உள்ளனர்- இதனால் இவர்களது திருமண வயதைப் பின்போடச் செய்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்; அத்துடன் ஐந்து வயது பிள்...

...கின்றனர்-

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் இவர்களுக்குள் வீடு, நிலம் இல்லாமையே முக்கிய பிரச்சினையாகவுள்ளது- இத்தகைய பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது- இவர்கள் வீடற்றவர்களுக்கு அக்கிராமத்தில் உள்ள நிலத்தை தேர்ந்தெடுத்து அதில் வீடுகளை அமைத்துக் கொடுத்து இவர்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளனர்-

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பல்வேறுபட்ட பிரிவுகளும் ஒன்றிணைந்து வெவ்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்வைத்து உடனடியாக செயலில் இறங்குகின்றனர்- இதுவரை இருட்டில் வாழ்ந்த இக்குடிமக்களின் வாழ்வில் ஒளியேற்ற விடுதலைப் புலிகள் முயல்கின்றனர்-

---

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# ஜனசக்தி திட்டம் அமுலாக்க சூழ்நிலை பொருத்தாக இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனசக்தி திட்டத்தின்கீழ் உரித்தாவணம் பெற்றவர்களுக்கான உதவிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. இதற்கு சூழ்நிலை சுமுகமாக இல்லை என்றே கூறப்பட்டுவருகிறது. வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் ஜனசக்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் 1990 ஜூன் மாதம் முதல் இதற்கான கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வாழைச்சேனை (கோறளைப்பற்று) பிரதேசத்திலும், இரண்டாம் கட்டமாக பட்டிப்பளை பிரதேசத்திலும், மூன்றாம் கட்டமாக ஏறாவூர் நகரப் பிரதேசத்திலும், பின்னர் வெல்லாவெளி மண்முனைப்பற்று பிரதேசத்திலும் ஜனசக்தி திட்டம் செயற்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது

எனினும் இவை எதுவும் அமுலபடுத்தப்படவில்லை. இது தொடர்பாக மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின் போது முறையிட்டும் பயன்கிட்டவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குக்காட்டும் தீவிரத்தை ஜனசக்தி திட்டத்தை அமுல்படுத்துவதில் காட்டலாமே என்று மட்டக்களப்பு மக்கள் அங்கலாய்ப்பு தெரிவித்துள்ளனர்.

---

# கால் நடைகளுக்கான முதலுதவிசிகிச்சைநிலையம்

கிளிநொச்சி அக்கராயன் வட்டத்தில் அமைந்துள்ள ஸ்கந்தபுரம் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடைகளுக்கானமுதலுதவிசிகிச்சை நிலையம் ஒன்றை திறந்து வைத்துள்ளது. இப்பிரதேசத்தில் 15,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றபோதும், உரிய பராமரிப்பைப் பெறவும் ஆலோசனை கலக்கவும் போதிய வாய்ப்புகள் இன்மையால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தமை தெரிந்ததே. கால்நடை வளர்ப்பு பற்றிய போதனாசிரியர் ஒருவரதும், மாவட்ட மிருக வைத்தியரதும் சேவைகளை கால்நடை வளர்ப்போர் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமைந்துள்ள இம்முதலுதவி சிகிச்சை நிலையம் மூலம் கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் தடுப்பூசியும் போடப்பட்டு வருகிறது;

---

### கோழிகள் வழங்கப்பட்டன

கிராமிய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பதினைந்து குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு தலா இருபது கோழிகள் வீதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கியுள்ளது. கோண்டாவில், புத்தூர், சங்கானை பகுதிகளில் கூடுகள் அமைக்கப்பட்டு இக்கோழிகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

# வட-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறிகள் ஏதும் இல்லை

## சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தற்போது நடைபெறும் யுத்தம் ஒரு முடிவுக்கு வரும் என்பதற்கான எந்த சமிக்கைகளும் தென்படவில்லை என்று மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்தம் தொடர்வதற்கான காரணம் சிலர் அதனை ஒரு வியாபாரமாக கொள்வதாகும். இந்த வியாபாரிகள் தமது பரம்பரைகளுக்குத் தேவையான பணத்தை தற்போது பெற்றுவிட்டார்கள்.

வடக்கு-கிழக்கு யுத்தம் பயங்கரவாதிகளுக்கு எதிரானது என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தெரிவிக்கின்றார் ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுக்களை நடாத்த தான் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார்.

இவ்விடயத்தில் கூட அரசாங்க கட்சியினர் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் யுத்தத்தை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவர முடியும்?

உலகிலேயே அதிக எண்ணிக்கை அமைச்சர்களைக் கொண்டநாடு சிறிலங்கா தான். 84 அமைச்சர்களையும், இவர்களின் உயர் அதிகாரிகளின் வாகனங்களிற்கான எரிபொருள், யுத்த செலவினம் ஆகியன குறைக்கப்படாத நிலையில் வாழ்க்கைச் செலவினத்தை குறைக்கமுடியாது.

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள வீண்விரயம், ஊழல்கள் போன்றவற்றினால் நாட்டின் இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெறமுடியாது திண்டாடுகின்றனர். தென் மாகாண சபையின் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து சூரியகந்த புதைகுழி போன்று சகலபுதைகுழிகளும் தோண்டி எடுக்கப்படும். இதற்கு அதன் மாகாண சபை மக்களின் ஒத்துழைப்பை நான் வேண்டுகிறேன் என மேலும் அவர் கூறினார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பேராசிரியர் உடலமைப்பியல் | நோயியல் | சட்ட மருத்துவம்|மனநோயியல் | மருந்தியல் | குழந்தை மருத்துவம் | அறுவை மருத்துவம் | சமூக மருத்துவம்.
2. அறக்கொடைத்தவிசு - அங்கக்கோணல் அறுவை மருத்துவம் | கழலையியல்.
3. சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் 11 |விரிவுரையாளர்- உடற்றொழிலியல் | சமுதாய மருத்துவம் | உயிரிரசாயனவியல் | உடலமைப்பியல்| நோயியல்|சட்ட மருத்துவம்| மருந்தியல் |மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் | குழந்தை மருத்துவம் | அறுவை மருத்துவம்| நுண்ணியிரியல் | ஒட்டுண்ணியியல்.
4. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல் | சமுதாய மருத்துவம் | உயிரிரசாயனவியல் | உடலமைப்பியல் | நோயியல் | சட்ட மருத்துவம் | மருந்தியல் | மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் | குழந்தை மருத்துவம் | அறுவை மருத்துவம்| நுண்ணியிரியல் |ஒட்டுண்ணியியல்.
5. தற்காலிக உதவி விரிவுரையாளர் - அணு மருத்துவம் (பௌதிகவியல்)
6. தற்காலிக செய்முறை காட்டுநர் - உயிரிரசாயனவியல் | நோயியல்
7. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி

### சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர் ;- ரூபா 16,100 - 6x400 - 18,500/- மாதமொன்றிற்கு

சிரேஷ்ட விரிவுரையர்ளர் தரம் :- II ரூபா 10,650 - 5x325 -12,275/- மாதமொன்றிற்கு

விரிவுரையாளர் (மருத்துவம்) :- ரூபா 6,050 - 10x250 - 8,550/- மாதமொன்றிற்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின்போது மேற் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 6050 /- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதாவது 6550/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) ;- ரூபா 6550/- மாதமொன்றிற்கு நிலையானது

## கட்சியில் தற்போது இருப்பவர்களைவிட

# ஐ.தே.கவில் அதிக உரிமை காமினிக்கு உண்டாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிக்கட்சிக்காக டட்லி சேனநாயக, ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்ற தலைவர்களுக்கு நாம் கைகொடுத்தோம் ஐக்கிய தேசியக்கட்சி எமக்கு புதிய கட்சி ஒன்றல்ல. தற்போது இக்கட்சியில் இருக்கும் பலரை விட எனக்கு இக்கட்சியில் அதிக உரிமையிருக்கிறது. எனவே அத்தகைய உரிமையிலிருந்து விலகியவர்கள் மீண்டும் அதில் பங்குதாரர்களாக மாறவேண்டும்.

இவ்வாறு திசமகாராமையில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது காமினி திசநாயகா தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது,

22 வருடகாலமாக ஐதே. கவில் நான் இருந்துள்ளேன். இடையில் பிரிந்து சென்றாலும் நாட்டில், குறிப்பாக வடபகுதியில் யுத்தமொன்று நடைபெறும் வேளையில் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வது எமது கொள்கையாக இருக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

## யாழ் போதனா வைத்தியசாலைக்குரிய

## பொது அறிவு பரீட்சை முடிவு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்திய பொது அறிவு போட்டிப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கீழ் பிரிவில் முதலாம் இடம் கெ. இந்திரமோகன் (யூனியன் கல்லூரி) இரண்டாம் இடம் தி. பாலமுருகன் (விக்னா கல்வி நிலையம்) மூன்றாமிடம் கி. குருபரன் (யாழ். இந்துக்கல்லூரி)

மேல்பிரிவு முதலாமிடம் சு. சிவபாதமூர்த்தி (விக்னா கல்வி நிலையம்) இரண்டாமிடம் ச. சஞ்சயன் (யூனியன் கல்லூரி) சி. வசீகரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

## யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு

# பிரிட்டனின் கொள்கலன்கள் கொழும்பில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்கு பிரிட்டன் அரசாங்கம் அன்பளிப்பு செய்த ஆறு கொள்கலன்கள் தொடர்ந்து கவனிப்பார் அற்ற நிலையில் கொழும்பில் தவம் கிடக்கின்றது.

இதே வேளை பிரிட்டன் அன்பளிப்பு செய்த இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வைத்தியசாலை பொருள்களை இராணுவத்தினரால் அவ் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுவிட்டன; இதில் பல மின்பிறப்பாக்கி மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் அடங்கும் என குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் அரசாங்கம் அன்பளிப்பு செய்த யாழ். போதனா வைத்தியசாலை உபகரணத்தில் கணிசமான தொகையை யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோதும் இன்னும் சில கொள்கலன்களில் பொருள்கள் கொண்டுவர இருப்பதாகவும், அதற்கான முயற்சிகளை யாழ். போதனா வைத்தியசாலமிக்க துரிதமாக எடுத்து வருகின்றது. (நி)

# மேசன் தொழிலாளர்கள் சங்கானையில் ஊர்வலம்

(தொல்புரம்)

கடந்த பல மாதங்களாக வறுமை நிவாரணம் கிடைக்காததையிட்டுவலிமேற்குசங்கானை பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த சீமெந்துகட்ட தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்களான மேசன் தொழிலாளர்களினால் மௌன ஊர்வலம் ஒன்று அண்மையில் நடாத்தப்பட்டு இது சம்பந்தமாக மகஜர் ஒன்று பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

அநேக மேசன் தொழிலாளர்கள்கலந்து கொண்டமேற்படி மௌன ஊர்வலம்வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்தியில் அமைந்த சங்கப் பணிமனையிலிருந்து சித்தன்கேணி வழியாக சங்கானைஉதவிஅரசாங்கஅதிபர்பணிமனையைச் சென்றடைந்து பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது

மேசன் தொழிலுக்கு பிரதான மூலப்பொருள் சீமெந்து இது கிடைக்காத காரணத்தினாலேயே மேசன் தொழிலாளர்கள் பாதிப்புற்றுள்ளனர் எனவும், மேற்கூறிய சீமெந்தை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளைச் செய்து தரவேண்டும் எனவும், இல்லாதபட்சத்தில் இவர்களுக்குமாற்றுத் தொழில் வசதிசெய்து வாழவழிவகுக்கவேண்டும்எனவும், மேற்கூறிய ஒழுங்குகள் சாத்தியப்படாத நிலையில் வறுமை நிவாரணம் தொடர்ந்து கிடைக்கக் கூடிய ஒழுங்குகள் செய்து தந்து வறுமையைப் போக்குமாறு அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

மகஜரை கையேற்றுக் கொண்ட பிரதேச செயலர், சங்க அங்கத்தவர்களான மேசன் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ் விடயம் சம்பந்தமாக அரச அதிபருடன் தொடர்பு கொண்டு விரைவில் சுமுகமான முடிவு ஒன்றைக்காண்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. (41)

# செல்லச்சாமியின்கூட்டத்தில் கூச்சல், குழப்பம்

(கொழும்பு)

அமைச்சர் செல்லச்சாமி கலந்து கொண்ட கூட்டமண்டபத்தில் இருந்த சிலர் அமைச்சருக்கு எதிராகவும், சர்ச்சைக்குரிய எட்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் கோஷம்எழுப்பினர். பொலிஸார் தலையிட்டு கூச்சலைக் கட்டுப்படுத்தினர்.

நுவரெலியாவில் நடைபெற்ற இககூட்டத்திலேயே குழப்ப நிலை ஏற்பட்டது.

எட்டப்பர் கூட்டம் என்று சத்தமிட்ட சிலரில்ஆறு பேரை பொலிசார் குண்டாந்தடியுடன் வந்து கைது செய்து கொண்டு சென்றனர்.

## 150 வெற்றிடங்கள் உள்ளபோதும்

# தாதிகள் பயிற்சி நெறி 8 பேர் மட்டுமே சேர்ப்பு

(நமது நிருபர்)

யாழ். போதனா மருத்துவமனை தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் 150 பேர் பயிற்சி பெற வசதி இருந்தும் கடந்த காலங்களில் மிகமிக குறைந்த தொகை மாணவர்களே பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப் பட்டனர். என்பது தெரிய வந்துள்ளது. இதில் கடந்த வருடம் ஆக 8 மாணவர்களே இப்பயிற்சிக்கு அனுமதிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்,

மேற்படி பயிற்சி நெறிக்கு குறைந்தளவு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டமை அரசாங்கத்தின் ஒரு திட்டமிட்ட செயல் என்பது தெரியவந்துள்ளது. இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரும் வர்த்தமானி அறிவித்தல் பெரும்பாலும் குறிப்பிட்ட இறுதித் திகதியின் பின்னரே இங்கு வந்து சேருகின்றது. மேற்படி நிலையினால் குடாநாட்டில் உள்ள எவரும் விண்ணப்பிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது புலனாகின்றது.

அரசாங்கத்தின் இத்திட்டமிட்ட செயலானது யாழ். போதனா மருத்துவ மனைக்கு போதியளவு தாதிகளை இல்லாமல் செய்துள்ளதுடன் இதனால் நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

# திருவடிநிலை கடற்பரப்பில்

# பேடன் பவல் பிரபு தினம்

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தினரால் நடாத்தப்படும் ஸ்தாபகர் பேடன்பவல் பிரபு தினம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(தென்மராட்சி)

கிளி-பளை மகாவித்தியாலயத்தின் சாரணர் சின்னம் சூட்டு விழாவும் பேடன் பவல் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு சு. புண்ணியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (86)

# மெய்வல்லுனர் போட்டி

கோப்பாய்கிறிஸ்தவகல்லூரி மெய்வல்லுனர் போட்டி

5. தற்காலிக உதவி விரிவுரையாளர் - அணு மருத்துவம் (பௌதிகவியல்)

6. தற்காலிக செய்முறை காட்டுநர் - உயிரிரசாயனவியல் | நோயியல்

7. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி

**சம்பள அளவுத் திட்டம்**

பேராசிரியர் ;- ரூபா 16,100 - 6x400 - 18,500/- மாதமொன்றிற்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் :- II ரூபா 10,650 - 5x325 -12,275/- மாதமொன்றிற்கு

விரிவுரையாளர் (மருத்துவம்) :- ரூபா 6,050 - 10x250 - 8,550/- மாதமொன்றிற்கு

(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின்போது மேற் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 6050 /- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதாவது 6550/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) ;- ரூபா 6550/- மாதமொன்றிற்கு நிலையானது

தற்காலிக உதவி விரிவுரையாளர் :- ரூபா 5270/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக செய்முறைக் காட்டுநர் :- ரூபா 4420/- மாதமொன்றிற்கு (நிலையானது)

பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி ;- ரூபா 7,300 - 10x250 ; 10x325 - 13,050 மாதமொன்றிற்கு

குறிப்பு;

இத்துடன் 1994 டிசெம்பர் 31ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற் குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

**பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1994-05-11**

**இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1994-03-25**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் | நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை யொட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு;- ஒப்பந்த அடிப்படையான நியமனமும் கவனிக்கப்படும்.

-பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-02-15

(சி-8687)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "[illegible]" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஐ.தே.கவில் அதிக உரிமை காமினிக்கு உண்டாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிக்கட்சிக்காக டட்லி சேனநாயக, ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்ற தலைவர்களுக்கு நாம் கை கொடுத்தோம் ஐக்கிய தேசியக்கட்சி எமக்கு புதிய கட்சி ஒன்றல்ல. தற்போது இக் கட்சியில் இருக்கும் பலரை விட எனக்கு இக்கட்சியில் அதிக உரிமையிருக்கிறது. எனவே அத்தகைய உரிமையிலிருந்து விலகியவர்கள் மீண்டும் அதில் பங்குதாரர்களாக மாறவேண்டும்.

இவ்வாறு திசமகாராமையில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது காமினி திசநாயகா தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது,

22 வருடகாலமாக ஐ.தே.கவில் நான் இருந்துள்ளேன் இடையில் பிரிந்து சென்றாலும் நாட்டில், குறிப்பாக வடபகுதியில் யுத்தமொன்று நடைபெறும் வேளையில் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வது எமது கொள்கையாக இருக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலைக்குரிய

# பிரிட்டிஷ் அன்பளிப்பு 6 கொள்கலன் கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் அரசாங்கத்தால் யாழ். போதனா மருத்துவ மனைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் கொண்ட கொள்கலன்களில் இன்னும் 6 கொள்கலன்கள் கொழும்பில் இருப்பதாக மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

இக்கொள்கலன்கள் உடைக்கப்பட்டு அவற்றில் உள்ள பொருள்கள் பரிசோதிக்கப் பட்ட பின்னரே இவற்றை இங்கு எடுத்துவர அனுமதி அளிக்கப்படுமென தெரிவித்த அவர் எப்போது இவை வந்து சேரும் என்பதை குறிப்பாகக் கூற முடியாதுள்ளது எனவும் தெரிவித்தார். (சி)

## கோமாரியில்

ற்கு பொருள்களை இறக்க வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னரே இப்பொதிகள் பற்றிய மேலதிக விபரம் தெரியவரும். (சி)

## ஐந்து

பிட்டுள்ளது.

தற்போது வடக்கில் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள முப்பத்தையாயிரம் இராணுவத்தினருடன் சேர்த்து மேலும் பத்தாயிரம் பேர் வடக்கு யுத்த நடவடிக்கைகளுக்கென அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்தவுடன் இடம்பெறவுள்ளபாரிய இராணுவ நடவடிக்கைக்காகவே கிழக்கிலிருந்து 10 ஆயிரம் இராணுவத்தினர் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொருளாதார

போகின்றோம் என்பதை புலிகள் முதலில் தெரிவிக்க வேண்டும்

கடந்த ஆண்டு இராணுவம் பல தோல்விகள் கண்ட போதும் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் மேலும் பல பகுதிகளை கொண்டுவரும் முயற்சி இந்த ஆண்டும் தொடரும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் இராணுவ வெற்றியால் சாத்தியமான ஒன்று எனவும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## மேலதிக

சிகிச்சைக்காக கொழும்பிற்கு கொண்டுசெல்லப்பட்டுவந்தனர். இந்நிலையில் கப்பற் சேவை நிறுத்தப்பட்டமையால் சுமார் ஐந்து மாதங்களாக இந்நிலை நீடிக்கிறது எனவும் இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்து கூறமுடியாது எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (நி, சி)

## வடபகுதி

காக சேவையிலீடுபடுத்தப்பட்டிருக்கும் கப்பல்களில் கணிசமான கொள்ளளவை இவ்விறகுகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இதனால் வடபகுதிக்குரிய அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுவதற்கு கப்பலில் இடநெருக்கடி ஏற்படுவதால் அவற்றின் அளவைக்குறைத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் சிலசமயம் ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

(நமது நிருபர்)

யாழ். போதனா மருத்துவமனை தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் 150 பேர் பயிற்சி பெற வசதி இருந்தும் கடந்த காலங்களில் மிகமிக குறைந்த தொகை மாணவர்களே பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப் பட்டனர். என்பது தெரிய வந்துள்ளது இதில் கடந்த வருடம் ஆக 8 மாணவர்களே இப்பயிற்சிக்கு அனுமதிக்கப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்,

மேற்படி பயிற்சி நெறிக்கு குறைந்தளவு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டமை அரசாங்கத்தின் ஒரு திட்டமிட்ட செயல் என்பது தெரியவந்துள்ளது. இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரும் வர்த்தமானி அறிவித்தல் பெரும்பாலும் குறிப்பிட்ட இறுதித் திகதியின் பின்னரே இங்கு வந்து சேருகின்றது; மேற்படி நிலையினால் குடாநாட்டில் உள்ள எவரும் விண்ணப்பிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது புலனாகின்றது.

அரசாங்கத்தின் இத்திட்டமிட்ட செயலானது யாழ். போதனா மருத்துவ மனைக்கு போதியளவு தாதிகளை இல்லாமல் செய்துள்ளதுடன் இதனால் நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

# திருவடிநிலை கடற்பரப்பில் பீரங்கி படகு தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் கடற்பரப்பிலிருந்து காங்கேசன் துறைப் பக்கமாக ''வீரயாகுரய'' பீரங்கிப்படகில் ரோந்துவந்த சிறிலங்கா கடற்படையினர் சுழிபுரம் திருவடி நிலைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இப் பீரங்கித் தாக்குதல் சம்பவத்தின் போது பல மீனவர்கள் தமது உடைமைகளை கடலில் கைவிட்டு நீந்திக்கரைசேர்ந்தனர். கடற்பகுதியிலும், கரைப்பகுதிகளிலும் பீரங்கிகள் வீழ்ந்து வெடித்தன. உயிர்ச்சேதம் இன்றி மீனவர்கள் தப்பித்துக்கொண்டதுடன், தாக்குதல் நடாத்திவிட்டு ரோந்துப் படகு அப்பால் சென்றதும் கடலில் கைவிட்ட மீன்பிடி உபகரணங்களை மீனவர்கள் மீட்டு வந்துள்ளனர் எனவும் கரையோரங்களில் உள்ள பனைமரங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (41)

## கப்பல்

னால் குடாநாட்டு மக்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு அதிகவிலை கொடுக்கத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முற்பணம்

மேற்படி அத்தியாவசியப் பொருள்களுக்கான முற்பணத்தைச் செலுத்த முடியாதுள்ளமைக்கான பல்வேறு காரணங்களையும் அரச அதிபர் முன்வைத்துள்ளார்.

அரசாங்க அதிபரின் இக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாக இதுவரை தகவல் எதுவும் வெளிவரவில்லை.

## மாவின்

வுக்கான சில்லறை விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுமென தெரியவரவில்லை. சங்கங்களுக்கு சங்கம் இவ்விலையில் வேறுபாடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. (நி) (சி)

3.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(தென்மராட்சி)

கிளி-பளை மகாவித்தியாலயத்தின் சாரணர் சின்னம் சூட்டு விழாவும் பேடன் பவல் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு சு. புண்ணியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (86)

# மெய்வல்லுனர் போட்டி

கோப்பாய்கிறிஸ்தவகல்லூரி மெய்வல்லுனர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது இதில் முதன்மை விருந்தினர்களாக கோப்பாய் கோட்டப் பிரதிகல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன், தமிழீழ கல்விக்கழகத்தைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

டிப்ளோமா பெற்ற

# மனையியல் ஆசிரியர்கள் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மனையியலில் டிப்ளோமா பெற்றவர்கள் இந்த ஆண்டில் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். கல்விச் சேவைச்சபை இதற்கான விண்ணப்பங்களை ஏற்கும்

பின்தங்கிய மாவட்டங்களில் ஆசிரிய பற்றாக்குறையுள்ளபாடசாலைகளில் இவர்கள் நியமிக்கப்படுவர். வெற்றிடம் உள்ள மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள்யாவும் பத்திரமுல்ல கல்விச்சேவை சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் மாதம் 15 ஆம் திகதியாகும். இது குறித்த விபரங்கள் இம்மாதம் 18ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் வெளிவந்துள்ளன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**21-2-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 926

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-8263, 24-6972, 24-2024, 26-7420, 42-6157, 41-9663, 26-1169, 24-4476, 24-0922, 41-9995, 26-2585, 27-1298, 28-1049, 41-5417, 24-5509, 42-9345, 42-6226, 24-9609, 28-0159.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-704, 27-8125, 26-8138, 26-8430, 41-8823, 41-1996, 41-9759, 26-8789, 26-4501, 41-5979, 41-4194, 26-5071, 28-1706, 24-7623.